Acc no. 171446

Q12
N14
171446

உ

திருச்சிற்றம்பலம்.

# திராவிட மதம்.

3-வது சைவமஹா சங்கத்தில்

சென்னை பண்டிதை

ஸ்ரீமதி. கா. அலர்மேன்மங்கை அம்மாள் அவர்களால்

வாசிக்கப்பெற்றது.

Accn No: 171446
No of Pages: 40

பாளையங்கோட்டை

பெத்தாச்சிப்ரெஸ்

1914

[அணு 4.

10381
A
C
1638
34/2009
OFFICE OF THE REGISTRAR ... 19 MAR 1914 MADRAS.

12914
171446
600 008
1038

உ

திருச்சிற்றம்பலம்.

# திராவிட மதம்.

## அவையடக்கம்.

ஒரு நூல் அரங்கேற்றுகையில் (அவை) சபையிலுள்ள புலவர்கள் ஆட்சேபஞ் செய்யாது அடங்கியிருக்கும் வண்ணம் அந்நூலைச் செய்தவர் அரங்கேற்ற ஆரம்பிக்கும்போது தங்களை இழித்துக் கூறும் கூற்றையே அவை+அடக்கம் ஆகக் கருதப்படுகின்றது. யானும் இவ்வுரையை எழுதவாரம்பிக்கும்போதே அவ்வழக்கத்தைப் பின்பற்றவேண்டியிருக்கின்றது. அன்றி மதவிஷயமாய் நான் எழுதப்புகுவது பலருக்கும் இஷ்டமிராதெனவு மறிவேன். எழுதுவதற்கு முன்னர்தானே மதவிஷயமாய் ஒன்றும் எழுதப்படாதென்றும், எழுதுவதும் மிகக்கஷ்டமென்றும், கஷ்டப்பட்டெழுதினும் யாவரும் அதை அங்கீகரிப்பது அதனினும் கஷ்டமென்றும் திராவிட மதமென்பது சரித்திர காலத்திற்கு முற்பட்டதோர் விஷயமென்றும், சரித்திர ஆதாரங் கிடைக்கும்போது ஆரிய மதம் வேரூன்றிவிட்டதென்றும், கஷ்டமான இவ் விஷயத்தை எழுதுவதைப் பார்க்கினும் வேறு விஷயத்தைப்பற்றி எழுதலாமென்றும் என்னை அதைரியப்படுத்தினவரே அதிகமாவர். பாளையங்கோட்டை சைவ சபையார் "திராவிட மதம்" என்னும் விஷயத்தை எனக்குக் கொடுத்து எழுதச் சொன்னபடியால் யானும் மஹா சபையின்கண் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவார் போல என் அற்ப அறிவினை ஆதாரம் பற்றி எழுதி வாசிக்கத் துணிதலுற்றேன். திராவிட மதமென்றொன்று பூர்வீகத்திலிருந்ததென எப்படிச் சொல்வது என்றும் என்ன ஆதாரம் என்றும் நாமே இப்பொழுது விஸ்வாமித்திர சிருஷ்டியைப்போலக் கற்பித்துவிடுவதாவென்றும் பலவாறு வினவுவாருமுளர். அப்படியாயின் கற்பியாத மதம் உலகத்திலெதுவோ தெரியவில்லை. ஆரியர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்னர் மதமென்பதே ஒன்றுங் கிடையாதெனில் அது முற்றிலும் தர்க்கத்திற்குப் பொருந்தி வராதென்பது நிச்சயம். குற்றஞ் சொல்வோர் அவர்களை ஓர் விஷயத்தைப்பற்றி யாதொரு குற்றமின்றி எழுதப் புகின் அவற்றின் கஷ்டத்தை அவர்களே உணரலாமென்று நினைக்கின்றேன். மதமென்பதே திராவிடர்களுக்குக் கிடையாது என்றும் அது ஆரியரால் பிற்காலத்திலுண்டானது என்றும் வாதிப்போர் சில்வாரிய.

மதத்தையே அனுசரிக்கலாம். தடுப்பாரொருவருமிலர். ஆனால் எம்மோரன்றோர் விசாரிப்பதற்குச் சுதந்தரமுள்ளவர்களாகையால் நிர்ப்பயமாய் ஒன்றை விசாரித்தே தீருவர். திராவிடமத ஸ்தாபகத்திற்கு ஆதாரங் கிடைத்தமட்டும் எழுதினேன். கிடையாதவற்றிற்குச் சிற்சிலவிடங்களில் யூகை செய்தும் எழுதியுள்ளேன். யூகையும் அனுமானமுங் கூடாதெனில் அன்னோருக்குச் சமாதானஞ் சொல்ல முடியாது. எம்மதந்தான் முற்றும் சந்தேக விபரீதமின்றித் தக்க ஆதாரத்தோடு நிற்கிறது? ஒன்றுமேயில்லை. நமது தேச சரித்திரமும், மத சரித்திரமும் ஓர் விதத்திலில்லை. பற்பல அபிப்பிராயமுள்ள ஜனங்கள் யாவருமே நிராசங்கமாய் ஒப்புக்கொள்ளும்படி சரித்திர வாதாரத்தோடு எழுத எவராலும் முடியாது. அன்றி திராவிடமதம் அல்லது தமிழ் மதம் என்பது திராவிடரது கொள்கை அதாவது அவர்களது ஆதிகால நடையுடை பாவனைகளைக் குறிப்பதேயன்றி வேறில்லை. "இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க" என்று பதிற்றுப் பத்துப் பதிகத்தாலும், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய வேறு சில நூற்களின் திருஷ்டாந்தங்களாலும், தமிழ் நாட்டிற்கு முற்காலத்திலே "தமிழகம்" என்னும் தனிப்பெயர் வழங்கினதென்றும், தமிழ் நாடு மற்ற நாடுகளோடு சேராததென்றும், அங்ஙனமே தமிழ் தனக்குரிய "ழ" என்னும் சிறப்பெழுத்துப் பெற்று தான் பிறிதொரு மொழிகளுட் பிறவாத தனிமொழியென்று காட்டுகிறதென்றும் ஆரியரிலும் திராவிடர் பலவழியிலும் சிறந்தார் என்றும், அவர்கள் பழமையான நாகரீகத்திற்குப் பொருந்திய மதமொன்றிருந்ததென்றும், அம்மதம் ஆரியர் மதத்தினும் விசேஷித்ததென்றும், வித்வான்கள் பலரும் விளம்புகின்றனர். அதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறேனேயன்றி வேறில்லை. ஆயினும், நெடுநாட் பழக்க வாசனையினால் பரம்பரைப்படியே அனுசரித்துக் கொண்டிருப்பவர்களும், சமயாபிமானிகளுக்குப் பயந்து மதவிஷயத்தில் புதிதாய் ஒன்றைச் சொல்ல அஞ்சுவோரும் அதிகமாயிருக்கின்றனர். இவர்கள் பயத்திற் கனுகுணமாக பழைய தமிழ் நூல்களும் அநேகமாய் அழிந்தும் மறைந்தும் வருகின்றன. இன்னுஞ் சிலகாலம் போயின் யாதாகுமோ தெரியவில்லை. ஆயினும் தமிழ்ப்பழங் குடிகளின் நாகரீக முதிர்ச்சியை மட்டும் விவரித்துச் சொல்ல அஞ்சுவதில்லை. இத்தகையோர் இத்தமிழகத்திலே ஆதிகாலத்திலிருந்த மதமென்ன என்பதை மட்டும் விவரித் தெழுத ஏன் துணிவதில்லையோ தெரியவில்லை. தமிழருக்கு மதமென்பதே ஒன்றுமில்லையென்பது வெளியாக வேண்டும். நானோ ஏதுமான தமிழ் நூற் பயிற்சி பெற்றவனுமல்லேன். எனக்கு இவ்விஷயத்தைப் பற்றி நன்கு யோசித் தெழுத காலமுங் கிடைத்திலது. என் புல்லறிவிற்குத் தோன்றியவாறு அவசரநிமித்தம் பிழைகள் பல நேரிடும்படி எழுதியுமுள்ளேன் ஆகையால் பெரியோர்கள் என் பிழைகளைப் பொறுத்து, "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப்



பொருள் காண்பதறிவு" என்றபடி நான் சொல்வதிலுள்ள உண்மைப் பொருளை மட்டும் நீரைப் பிரித்துப் பாலையுண்ணும் அன்னம்போல ஆராய்ந்துகொள்ளக் கடவர். இதுவுமன்றி, என் கருத்தைப் பண்டிதோத்தமர்களுக் கறிவிக்கும் பக்ஷத்தில் என்னை அறியாது நேர்ந்துள்ள குற்றங்களை வேறு விதமாய்த் திருத்தி பூர்வீகத் திராவிட மதத்தைப் பற்றி அவர்களே செவ்வனே தக்க ஆதாரங்களோடு ஆங்காங்கு மிகப் பழைய தமிழ் நூல் செய்யுட் பிரமாணங்களை இன்னுஞ் சிறப்பாய் எடுத்துக் காட்டி என் மனோரதத்தை நன்கு நிறைவேற்றுவார்களென்னும் நம்பிக்கையினாலேயே நான் இவ்வியாசத்தை அறையுங் குறையுமாய் எழுதி முடித்திருக்கிறேனேயன்றி வேறில்லை. "பிழை பொறுப்பது பெரியோர் கடன்."

## தமிழர் உபாசிக்கும் கடவுட் பொருளின் இயல்பும், அவர்களது பூர்வீக ஆசார அனுஷ்டானத்தின் உயர்வும்.

பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் மிக்க வீராவேசங் காட்டி அடிக்கடி இந்நாட்டிற்குப் புதிதாய் வரும் அந்நிய வேந்தரோடு போராடியதாலும், இந்நாட்டின் வெப்ப மிகுதியாலும், தேகதிடங் குன்றி மன அடக்கம் பெற்று ஒவ்வொன்றினையும் ஆழ்ந்தறியும் இயல்பினையுடையராய் மாறி இவ்வுலக அழகைக் கண்டு வியந்து இயற்கையின் தத்துவத்தை உள் நுழைந்து பார்த்து எங்கும் ஒற்றுமையும் அவ்வொற்றுமை நிலைபெறுதற்குரிய ஓர் உயிர்ப் பொருளும் இருக்கக்கண்டு இவ்வியற்கையில் மறைந்தும் விரிந்தும் கிடக்கின்ற அவ்வுயிர்ப்பொருளையே கடவுளென்றெண்ணி அதனை மனத்தால் தியானித்து வழிபட்டு வந்தனர்.

இவ்வுண்மை முல்லைப்பாட்டு முதலிய நமது பண்டைக்காலத்துத் தமிழ் நூற்களின் மூலமாய் வெளியாகின்றது. அக்காலத்திலே எவரும் செய்யுருவை வணங்காது பரம்பொருளை வழிபடுதற்குத் தனியாய் ஓரிடத்தில் மன அமைதியோடிருந்து உபாசித்தும், நமக்கு உள்ளும் புறமும் நின்று நம்மை அசைவித்தும், அறிவித்தும் வருகின்ற சக்தி எதுவென்று விசாரித்தும் வந்தனரென்பதற் கையமில்லை. இன்னமும், அருபமாய் எங்குந் தானாய் விளங்கும் முழுமுதற் பொருளைச் சுட்டி இவ்வண்ணம் ஏறக்குறைய நாலாயிர வருடங்களுக்கு முன்னிருந்த ஆசிரியர் தொல்காப்பியனார் சொல்லியிருக்கும் தெய்வ லக்ஷணத்தையும் அதே காலத்திற் றோன்றிய ஆரிய ஜாதியார் இருக்கு முதலிய வேதங்களில் எழுதிவைத்த தெய்வ நிலையையும், ஒன்றையொன்று ஒப்பிட்டுப் பார்க்

போமாயின் திராவிடரது பூர்வீக மதத்தின் நன்னிலை இன்னதென உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்கு விளங்கும். தொல்காப்பியர் காலம் நாலாயிரமோ, ஐயாயிரமோ சரியாய்ச் சொல்ல முடியாதெனச் சொல்லினும், அவர் நெடு நாட்களுக்கு முன்னிருந்தவரென்பதற்குப் பிழையில்லை. பழங்காலத்திலே கடவுள் தன்மையை நன்குணர்ந்த திராவிடரைப் போல வேறொருவரும் உணர்ந்திருக்கவில்லை யென்று சொல்லலாம். திராவிடரைப்போல மற்றவர்கள் உணர்ந்திருக்கவில்லை யென்று நாம் சொல்லுவது சரியல்லவென்று வாதிப்பதுமன்றி இத்தகைய அபிப்பிராயங்கள் தர்க்கத்திற் கிடமானதெனச் சொல்வாருமுளர். வேறு சிலரோ ஆரியரும் திராவிடரும் ஒரே ஜாதியினரென்றும், ஆதியில் ஒரே இடத்தில் வசித்தவரென்றும், திராவிடர்கள் மட்டும் எவ்விடத்து நின்றும் வரவில்லை யென்றும், ஆரியர் மட்டும் இந்தியாவிற்குப் புதிதாய் வந்தவரென்றும், இருப்பினும் எவர்களை எவர்கள் முன்னர் பார்த்து மத சீர்திருத்தமும் நாகரீகமும் அடைந்தனரெனச் சொல்ல முடியாதென்றும், இருவர் நாகரீகமும் சமான காலமென்றும், எவ்விஷயத்திலும் கால நிர்ணயம் செய்யமுடியாதென்றும் சொல்வாருமுளர். எங்ஙனமாயினு மாகுக.

ஆரியரது பழைய நூலாகிய இருக் வேதத்தை ஆராய்ந்தறியினும் இத்தகைய நல்ல ஆதாரங்கள் கிடைப்பதரிது என்பதிற் பிழையில்லை. அவர்களோ முதல் முதல் ஆகாயத்தையும், விண்மீன்களையும், சூரியனையும், விடியற்காலத்தையும், பகற்பொழுதையும் தெய்வங்களாகத் தொழுதுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. பூர்வீகத் தமிழ் மதத்திற்குத் தொல்காப்பியமும், மத்திய காலத்திற்குத் திருக்குறள் முதலியவைகளும், சிறந்த பிரமாணங்களாகும். இத்தகைய பண்டைக் காலத்துத் தமிழ் நூற்களால் குறிக்கப்படும் அந்தரங்கப் பொருட்டுப் பிரமாணம் வடநூற்களில் ஆராய்ந்தறிய வேண்டுவதில்லை. ஒவ்வொன்றிற்கும் ஆரிய நூற் பிரமாணங் காட்டியே இடர் படுகின்றார்கள். ஆகையால் மத விஷயத்தில் ஆரியர் செய்தவை யனைத்தும் திராவிடர்களுக்குப் பிரமாணமாகா. ஆரிய சமயாசாரிகளினால் காலானுகூலமாய் உற்பத்தியான சமயங்களனைத்தும் இன்றே மாறினும், அன்றி வேறு பல சமயங்கள் புதிதாய்த் தோன்றினும் இவற்றிற் கெல்லாம் பொதுவாய்ச் சகலத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்ற பண்டை காலத்துத் திராவிட மதம் நித்தியமாயிருக்குமென்றே நம்பவேண்டியிருக்கின்றது. ஏனெனில், தமிழ் மதம் சகல மதத்திற்கும் பொதுத் தன்மையிலிருக்கிறதாய் நினைக்கவேண்டியிருக்கின்றது. இதற்குத் திருக்குறள் ஒன்றே சான்று பகரும். திருக்குறள் ஆராய்ச்சியில் திருவள்ளுவர் மதமென்றொன்றேற்படலாம். அம் மதமே திராவிட மதமெனினும் இழுக்கன்று. ஆரிய மக்கள் நாகரீக விருத்தியன்றி சர்வ வுலகங்களையும், சர்வான்மாக்களையும்,



ஆக்கி அழிக்க வல்ல முழு முதற் பெருங் கடவுள் ஒருவனுண்டென்று உணராமல் சிருஷ்டிப் பொருள்களாகிய இடி, மழை, மின்னல் முதலிய இயற்கைப் பொருள்களைக் கண்டஞ்சி அவற்றை யெல்லாம் தெய்வமென்று உபாசித்து தங்கள் வலிமையால் பல விலங்குகளைக் கொன்று அவற்றின் முன் வைத்துப் படைத்து வணங்கியுமுள்ளார்கள். தென்னாட்டிலுள்ள தமிழ் மக்களோ இங்ஙனம் ஆரியரைக் குறிப்பிடுங் காலத்திலே மிக நாகரீக விருத்தி பெற்று சர்வ உலகங்களையும், சர்வான்மாக்களையும் இயக்கும்படியான கடவுள் ஒருவனுண்டென் றுணர்ந்து மற்றச் சடப் பொருள்களாகிய எவைகளையும் தொழாமல் இருந்துள்ளார்கள் என்று தெரிகின்றது. பின்னால் தமிழரை ஒருவாறு பின்பற்றியே வடமொழியாளரும் தமிழர் உபாசிக்கும் பரப்பிரம்மப் பொருளையே தாமும் வழிபடுதற்குரிய முழுமுதற் பொருளென்று நினைத்து எழுதுவாராயினர். இச்சந்தேகம் நிவிர்த்தியாவதற்கு ஆரியரது ஆதி சரித்திரத்தைப் படிக்க வேண்டும். முதலில் அவர்கள் ஆசியாவிலிருந்து பிரிந்து வந்து பலவிடங்களிலும் போய் வசித்தார்கள். அப்படிப் பிரிந்துவந்தவர்களுக்குள் எவர்களுமே மத விஷயத்தில் இந்தியாவிற்கு வந்த ஆரியரைப் போல மகோன்னதஸ்திதி யடையவில்லை. மேற்றிசையிற் குடியேறிப் பரவின ஆரியர்கள் ஆரம்பத்தில் அங்கங்கே மிருகப்பிராயரா யிருந்தார்கள். ஆரியர் பழைய தோற்றத்திற்கு இது முக்கிய திருஷ்டாந்தமாகும். ஆரிய சந்ததியிற் றோன்றி சிதறிய பலரும் முதலில் அநாகரீகமாகவே இருந்துள்ளார்கள். பின்னால் இந்தியாவிற்கு வந்தபிறகே திராவிடக் கூட்டுறவு பெற்று பிரகாசித்துள்ளார்களென்பதற் கையமில்லை. நன்னிலையிலிருந்த திராவிடர்களும், புதிதாய் வந்த ஆரியரும், மதக்கொள்கையில் அபிப்பிராய பேதமுடையவராகி தத்தம் கொள்கைகளையே நன்குமதித்து ஒருவர்க்கொருவர் போதித்துக்கொண்டனர். வழக்கத்திற்கு விரோதமான ஜாதிசமய ஏற்பாடுகளும், ஆசாரங்களும், புதிதாய் வந்த ஆரியரால் ஏற்படவே நாட்டிற் பெருங் குழப்பமாக மாறி மத விஷயத்தில் வாதப்பிரதிவாதங்களுந் தோன்றின அக்காலத்தில் புத்தராவதாரமானார். இக்கௌதம சாக்கிய முனிவரை திராவிட வம்சத்திற் றோன்றியவரென்பர் பலர், ஆரிய வம்சத்து க்ஷத்திரியரென்பார் சிலர், திராவிட வம்சமோ, ஆரிய வம்சமோ, தெரியவில்லை யெனினும் கௌதமர் ஆரிய மதத்திற்கு விரோதியென்பதற் கையமில்லை. எங்ஙனமாயினுமாகுக. கௌதமர் திராவிட தேசத்திற் பிறந்தவரென்பதக் கையமில்லை. வடநாட்டில் ஏறக்குறைய இரண்டாயிரத்தைநூறு வருடங்களுக்கு முன் தோன்றிய கௌதம சாக்கிய முனிவர் திராவிடர்கள் தங்களுக்குரிய நல்லொழுக்கங்களை வழுவாதிருந்தால் சகல துன்பங்களிலிருந்தும் விடுபடுகின்ற "நிர்வாணம்" என்னும் முக்திநிலை கிடைக்குமென்று போதித்தார். திராவிட மதத்தினருக்குரிய நல்லொழுக்கங்களையே திருவள்ளுவரும் பௌத்த

மதம் பரவியிருந்த காலத்திலே எழுதிவைத்தார். இத்தகைய பல நிதர்சனங்களால் திராவிடர்களின் ஆதிசமயம் பரிசுத்த ஆஸ்திக மதமாகும் என்பதிற் சையமில்லை. மாசு மறு அற்ற லௌகிக மெனினும் பொருந்தும். ஜாதி சமய பேதங்களுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும் இடமின்றி யாவரும் அபேதமாய்க் கூடி வாழக்கூடிய சமயமெதுவோ அதுவே திராவிட சமயமாகையால் நாகரீகமுடைய இக்காலத்திலும் எவரும் அங்கீகரிக்கும்படியாய் அவ்வளவு தெளிவு பெற்றிருந்திருக்கின்றது. இதை யோசிக்குமிடத்து திராவிட மதமென்பது எக்காலத்திலும் நூதன மதமன்று. எத்தேசத்தாருக்கும், எக்காலத்தாருக்கும், எச்சாதியினருக்கும், எம்மதத்தினருக்கும், சம்மதமாயுள்ள மதமெதுவோ அதுவே தமிழ் மதமென்பதற் காட்சேபணையில்லை. பழைய காலத்துத் திராவிடர்களுக்குள் தங்கள் பூர்வீக மதத்திற்கேற்றபடியே எவர்களோடும் பேதமின்றி உண்டும், பெண்களைக் கொண்டுங் கொடுத்தும், சர்வதேச சகோதரவாச்சல்யங் காட்டியும், ஒரே கடவுளை வணங்கியும், மனச்சான்றுக்கு விரோதமின்றி இகபரமிரண்டினும் சுகிர்தங்கிடைக்குமாறு நடந்து வந்துளார் என்று நம்பவேண்டியிருக்கின்றது. நான் இவ்வண்ணம் எழுதுவது பெரியதோர் சந்தேகமென்றும், இப்பொழுது புதிதாய்க் கற்பித்தெழுதியதே யன்றி உண்மையல்ல வென்றும், சிலர் சொல்லினுஞ் சொல்வர். இத்தகையோர் எப்பொழுதும் இந்நாட்டில் ஜாதி சமய பேதங்களிருந்தனென்றும், ஒருவர் வீட்டில் மற்றொருவர் உயிர் நீங்கினும் உண்ணார்களென்றும் சாதிக்க வேண்டும். அதற்கு ஆதார மில்லையெனின்; திராவிடர்களின் பூர்வீக நிலை நன்னிலை யென்பதற் கையமென்ன? நாம் பகற் கனவு காண்பதாகவும், திராவிட தேசத்திற்கில்லாத ஏற்றத்தை வரவழைத்துச் சொல்லி மனப்பாலருந்தி மகிழ்வதாகவும், சொல்பவருங்கூட ஜாதி சமயத்தின் விபரீதம் எப்பொழுதும் இவ்வண்ணமே இருந்ததாய்ச் சொல்வதற்கின்றி விழிக்கின்றனர். ஆரியரும் இத்தேசத்திற்குப் புதிதாய் வந்தபோது இதிகுலத்தோர் செய்யும் சமயற் பாகங்களையே உண்டும், எக்குலத்துப் பெண்களையுமே கொண்டும் வந்துள்ளார்கள். ஆரியர் நான்கு வருணத்துப் பெண்களையும் கொள்ளலாமென்றும், எக்குலமேயாயினும் கன்னிகைக்குத் தோஷமில்லை யென்றும், பிராமணர் தங்களுக் கனுகூலமாய் வைத்துக் கொண்டிருக்கும் மனு நீதிக்கு முன்னமே திராவிட தேசத்தில் பெண்களை யெங்குங் கொண்டும், கொடுத்தும் வருகிற வழக்கம் இருந்திருக்கவேண்டும். திராவிட தேசத்திலே ஓர் ஜாதி உயர்ந்தது மற்றொரு ஜாதி தாழ்ந்ததென்று இல்லாதிருந்தபடியினாற்றான், அர்ச்சுனன் பாண்டிய நாட்டுப் பெண்ணைக் கொண்டதற்கும், சீவகன் பல சாதி மாதரை மணந்ததற்கும் ஏதுவாயிற்று. திராவிடரையும் ஆரியரையும் வேறு பிரித்துக் காட்டக் கூடிய ரூபவேறுபாடுள்ள விவாகங்கள் பழைய காலத்திற்றானே நடந்தேறியிருக்குமாகில், யாவரும் ஒரே நிறமும் ரூபமுமாக மாறியிருக்குமிக்காலத்



தில் மணஞ் செய்துகொள்வது என்னும் பொருத்தமுடையதாகவேயிருக்கும். பூர்வம் திராவிடர் தங்கள் தேசத்தில் எவர்களையும் மணஞ்செய்து கொண்டது பொய்யெனில், திருக்குறளில் களவியல் என்னும் காமத்துப் பாலில் பொதுவாய் ஸ்திரீகள் புருஷர்களைத் தெரிந்துகொள்ளும்படியாய்ச் சொல்லியிருப்பது பயனின்றியதாய் முடியும். நாயுடு வீட்டில் நாயுடுவே மணஞ் செய்யவேண்டு மென்றும், வேளாளன் வீட்டில் வேளாளனே விவாகம் செய்யவேண்டுமென்றும், எந்த தர்ம சாஸ்திரத்தில் விதித்திருக்கின்றது? ஆதலால் இப்பொழுதும் நம் பூர்வீக வழக்கத்தின்படியே நடந்து வந்தால் நாம் திராவிட மதஸ்தர்களே ஆவோம். இது நாகரீகமுள்ள எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவென்பதிற் பிழையில்லை. இப்பொது வான உண்மை ஒவ்வொரு திராவிடன் மனத்திலும் சிலையிலெழுத்தைப்போல பதிந்திருப்பின் நாம் மதச் சீர்திருத்தம் பெற்றுப் பிரகாசிப்பதற்கேதுவாகும்.

## திராவிட சமய நூல்கள்.

இப்போது தனித் தமிழ் மதத்தைக் குறிக்கக்கூடிய சமய நூல்கள் கிடைப்பதருமையாக விருக்கின்றன. தொல்காப்பிய மென்பது தென்னாடு கடல்கொள்ளப்படுவதற்கு முன்னர் எழுதியதோர் பண்டைக் கால நூலாதலால், அந்நூல் நமக்குப் பிரமாணமாயினு மாகலாம். ஆரியர் இக் கிரந்த காலத்திற்கு முன்னே தென்னாட்டிற்கு வந்து தமிழரோடு உறவாடவுமில்லை. அவர் மதத்தை நிலை நாட்டவுமில்லை. குமரியாற்றின் தெற்கேயிருந்த நாற்பத்தொன்பது நாடுகள் கடலால் மேற்கொள்ளப்பட்டு தமிழ் நாடு பின்னால் பற்பல மாறுதலடைந்துள தென்பதற் கையமில்லை. இவ்வண்ணமாக தமிழுலகின்கண் தென்பெரும் பகுதியே அழிந்து நெடுங் காலவளவிற் றோன்றிய எண்ணிறந்த அரும் பெரும் நூல்களும், இடைச் சங்கமும், முதற்சங்கமும் இருந்த இடமுந் தெரியாமல் மறைந்தன. மிக்க அருமையான தமிழ் நூற்கள் நச்சினார்க்கினியர் காலத்திற்றானே இறந்தொழிந்தன வென்பது எவரறியார்கள். பழைய நூல்களில் சிலவற்றின் பெயர்கள் மட்டும் நமக்கிப்பொழுது தெரிகின்றனவே யன்றி அந்நூல்களின் வரலாறும் இயற்றினவர்களின் பெயரும் நமக்குச் சரியாய் விளங்குவதில்லை. சில புத்தகங்களிலே சில சூத்திரங்கள் மட்டும் காணப்படுகின்றனவே யன்றி அந்நூல்களின் முதல் நடு இறுதி முதலியவைகள் யாவுமே ஒழுங்காய்க் கிடைப்பதில்லை. சில அருமையான தமிழ் நூல்களைப் பற்றிப் பழைய புலவர்கள் தங்கள் காலத்திற்றானே இறந்தொழிந்ததென்று எழுதியுள்ளார்கள். ஆதலால் தமிழ்ச்சமய மின்னதென்று தமிழ் நூல்களின் ஆதாரத்தைக்கொண்டே சந்தேக விபரீதமின்றி எழுதுவது

தமிழ் பாஷா பண்டிதர்களுக்கும் கஷ்டமாகவே யிருக்குமென்பதற் கையமில்லை. இருப்பினும் திராவிடர்களின் இயல்பைப் பற்றியும், கடையுடை பாவனைகளைப் பற்றியும் ஒருவாறு சொல்வது கஷ்டமல்லவென்றே கருதுகின்றேன். திராவிட பண்டிதர்கள் பண்டைக் காலத்திற்றானே உலக இயற்கையையும், மனித இயற்கையையும், உள் நுழைந்து பார்த்து தாம் கண்ட அரிய பொருளின் நுட்பத்தின்படி நூலியற்றி இவ்வுலக வியற்கையின் தத்துவத்தை ஆராயும் நூல்களுக்குப் "புறப்பொருளெ"ன்று பெயரிட்டும், மனித இயற்கையை ஆராய்வனவற்றிற்கு "அகப்பொருள்" என்னும் பெயரிட்டுக்கொண்டனர். ஆண் பெண் என்னும் இரு பாலாரையும் சமத்துவமாய்ப் பாவித்து மற்றெல்லாத் தோற்றங்களையும் தனக்குக் கீழாக நிறுத்தித்தான் யாவற்றினும் மேலாகப் பாவித்துத் தனக்கு மேலோரன்றின்றித் தோன்றுவதாய் அறிந்து இன்ப துன்பங்கள் உதிப்பதிற்குத் தானே காரணமென்று தெரிந்து எல்லா வுலகங்களும், எல்லாப் பொருள்களும், தன்னைச் சுற்றிச் செல்வதாய் நினைத்து அன்பின் வடிவமாகிய மனித வியற்கையை இவ்வண்ணம் உயர்த்தி ஆராய்வதே அகப்பொருளிலக்கணமாம். இனிப் புறப்பொருள் இலக்கணமென்பதோ மக்கள் இவ்வுலக இயற்கையுடன் பொருந்தி இன்றியமையாத சில கருமங்களைச் செய்து, பலவித முயற்சி வேறுபாடுகளிலும், பிரவிஷயங்களிலும் நுழைந்து ஆராய்ந்து தெளிவதாகும். இந்நூல்களிலே இகபர சம்பந்தமிரண்டும் அடங்கியுள. அகப்பொருளென்பது வடமொழியிலே யில்லாத நூலாக விருக்கின்றது. ஆறு சாஸ்திரங்களேற்பட்ட காலத்திலே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலிய மனோதத்துவ விசாரணைகளும் ஆரியருக்கேற்பட்டன. அகநானூறு, அகப்பொருள வெண்பா முதலியவைகளும் தமிழர்க்கே உரியன. வட நூலார் அநேகமாய்ப் புறப்பொருள் சம்பந்தமாகவே ஆதியில் விசாரிப்பவராயிருந்தனர். பின்னர் பற்பல மாறுதல்களடைந்தவராவர். அவர்களது நானாவிதமான மாறுதல்களை அவர்களே இப்பொழுது நன்னிலைமைக்குக் கொண்டுவந்துளது. யோசிக்குமிடத்து தமிழருக்குரிய தத்துவ நூல்களே அவர்களுக்குப் போதுமான ஆதாரங்களாகும். இத்துடன் சர்வசமயசமரச நீதி நூல்களோ திராவிடத்தில் பலவுள. அதிகமில்லை யென்போர் நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்றபடி நாலடியும் திருக்குறளும் போதும். இதுவுமன்றித் தமிழரின் சுயாநுபவ விருப்பத்தை நோக்குமிடத்து இயல் வேதமாகிய ஆத்ம வேதத்தை யுடையவர்களென்று சொல்வது மிகப் பொருத்தமுடைத்து. சுயாநுபவத்தையே பெரிதாகக் கோருபவர்கள் லிகித வேதத்தை முக்கியமென்று சார்ந்திருப்பதில்லை. அதை யோர் உபகரணமாகவே கொள்வர். வேதமென்பதை ஆரியரும் அவர்களைப் பின்பற்றிய பல சமயத்தார்களும் பரிசுத்த புத்தகமாகக் கருதுகின்றனர். பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு வியாச பகவானால் சிக்கறுக்கப்பட்ட தென்றும். இருப்பினும்

OFFICE OF THE REGISTRAR
10 MAR 1914
MADRAS

திராவிடர்களும் இத்தகைய [illegible] வேதமென்றோர் புத்தகத்தை எழுதிவைத்துக்கொண்டிருப்பினும் [illegible] இக்காலத்திலே [illegible] சாஸ்திரத்திற்கு எதிர்நின்று சர்வஜன அங்கீகாரம் பெறுவது கஷ்டமே. பிரம்ம சமாஜத்தாரும், (Unitarians) கிறிஸ்தவ மார்க்கத்தாரும், தத்தம் வேதப் புஸ்தகங்களை தெய்வீக சம்பந்தப்பட்டெழுதிய தென்னும், அம்சத்தை நிராகரித்துவிட்டார்கள்; பௌத்தர், சமணர் முதலியவர்களும் கீர்வாண வேதத்தை நம்புவதில்லை யன்றோ? பூர்வீக திராவிடர்களுக்கு இப்படி எழுதிவைத்துக்கொண்ட அருள் வேதமென்று சொல்லக்கூடிய புத்தகங்கள் எவைகளுமின்றிச் சகல புத்தகங்களுக்கும் ஆதாரபூதமாயிராநின்ற இப் பிரபஞ்சமே ஓர் வேதப் புத்தகமாயிருக்கலாம். இதை நாகரிகமுள்ள இக்காலத்தவரெவருமே சிறப்பித்துப் பேசுவரேயன்றி வேறில்லை. இதனால் அருள் வேதமென்றோர் புத்தகத்தை உயர்வு படுத்துவதை சரித்திரகாலத்திற்கு முற்பட்டது அல்லது அதன் விவரம் நமக்குத் தெரியாது என்று நாம் நிரகிக்கவேண்டியதே யன்றி வேறில்லை. நம் பெரியோர்கள் எழுதிவைத்த நற்புத்தகங்களென்னும் பரம சாதகத்தை நான் குறைவு படுத்திப் பேசவுமில்லை. உணர்வென்னும் உரைகல்லில் உரைத்துப்பார்த்து புத்தகங்களிலே நல்லவை கெட்டவை யுணரவேண்டும்.

## திராவிடரது ஆத்ம வேதமாகிய இயல் வேதம்.

ஆத்ம வேதமென்பது நமக்குச் சகல ஞானத்தையும் கற்பிக்கக்கூடிய இப்பிரபஞ்சமே யன்றி வேறில்லை. அது கடவுளைப் பற்றி வாய் திறந்து ஓர் வார்த்தையுஞ் சொல்லாமலே அவனிருப்பைப் பற்றி

---

* பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு வியாச பகவானால் சிக்கறுக்கப்பட்ட தென்றும், இருப்பினும் வேதத்திற்கு சுருதி, மறை, எழுதாக்கிளவி, ஆதி நூல் என்னும் பல பெயர்கள் உளவென்றும், ஓதுவிக்கவும், ஓதவும், கேட்கவும் ஆகாதெனச் சில ஜாதியாருக்கும், பெண்பாலாருக்கும் மறைக்கப்படுவதினால் "மறை" என்றும் ஓதல், ஓதுவித்தல் என்னும் இரு தொழிற்கும் உரியவர் அந்தணராகையால் தங்களை மறையோரென்றும் தெரிகின்றது. வேதத்திற்காதி அந்தமில்லை யென்றால் அது இருப்பனவற்றுள் புராதனமான புத்தகம். அதாவது எழுதின காலம் தெரியவில்லை யென்பதே பொருந்தும். எழுதாக்கிளவி, எழுதொணாமறை என்பதுவும் ஈசுரனே சொல்லியருளிய தென்பதுவும், ஈசுரனே திருவாய் மலர மற்றவர் எழுதிக்கொண்ட தென்பதுவும், உபசார வழக்கே யன்றி வேறில்லை. விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன்.

ஆயிரம் வாயால் கோஷித்துக் கொண்டாடுகின்றது. இதைவிடக் கடவு
ளைப்பற்றி விவரித்துச் சொல்ல அபிப்பிராய பேதமுடைய பற்பல புஸ்த
கங்களிருப்பினும் விசேஷமல்ல வென்றே கருதுகின்றேன். அணுமுதல்
மேரு வரையில் சிருஷ்டியெல்லாம் எம்பிரான் மகிமையை வெளிப்படுத்
தாநிற்க நமக்கு வேறு சாஸ்திரங்களேன்? வேதங்களேன்? எல்லா வஸ்து
வைப் பார்க்கினும் அவர் மயமாகவே காணப்படுகின்றன. எங்குமே அவ
ரது அன்பு. எங்குமே அவரது சக்தி. எங்குமே அவரது புத்தி விசே
ஷத்துவம் நமக்குப் புலப்படுகின்றன. அவர் இருப்பை நமக்குச் சதா
அறிவிக்காத வஸ்து எது? கடவுளிடத்திலிருந்தே திராவிடர்களுக்கும் ஓர்
வேத புஸ்தகம் கிடைத்திருப்பதாய்ச் சொல்லிக்கொள்ளினும் அதனால்
திராவிடர்க்கோர் பெருமையுங் காணோம். அப்புஸ்தகம், இருக்கு மிடபே
தத்திற்கும், தேசாபிவிர்த்திக்கும் பாஷையின் விருத்தி, க்ஷயத்திற்கும் தக்
கபடி மாறுபட்டுக்கொண்டே யிருக்கும். இதுவுமன்றி, கடவுள் தமது
கட்டளையை அல்லது இகபர சம்பந்தமாய் எழுதப்பெற்றிருக்கும் வேதத்
தை, ஓர் வகுப்பிற்கும், ஓர் பாஷைக்கும் பொருத்தமாகும்படி ஒருபோ
தும் வெளியிடார். பட்சபாதங் காட்டி அவர் வெளியிட்டிருப்பினும் கால
மாறுதல்களினால் அவ்வேதமும் பற்பல மாறுதல்கள் அடைந்து முடிவில்
பயனற்றதாய்ப் போய்விடும் என்பதைக் கடவுளறியாதவரல்லர். ஆரிய
வேதம் அங்ஙனமே பல வகுப்பாரின் ஆக்ஷேபத்திற்கும், சந்தேக விபரீதத்
திற்கும் இடமாயிருப்பது எவரறியார்கள். ஆகையால் திராவிடர்கள் அரு
ளால் எழுதப்பெற்றதாய்ச் (அல்லது வேறு விதமாய்) சொல்லும் லிகித
வேதத்தைப் பார்க்கினும், சுயானுபவமாகிய ஆத்ம வேதத்தை விசேஷ
மென்று முற்காலத்திற்றானே நினைத் தெழுதிவைத்துக் கொள்ளவில்லை
என்பதற் கையமில்லை. தமிழர்களது வேதமோ சகல தேசத்தார்களுக்
கும், சகல மதத்தார்களுக்கும், ஸ்திரீ புருஷர்களுக்கும், பண்டிதபாமரர்
களுக்கும் சகஜமாய் விளங்கும்படியாக இருதயமாகிய ஏட்டில் எழுதப்பட்
டிருக்கின்றது. திராவிட வேதமென்பதே சகல மதஸ்தர்களின் தர்மங்க
ளுக்கும் மூலாதாரமாகையால் அவர்கள் பிரபஞ்ச வேதத்தோடிருந்து
மனத்திருப்தி அடைந்து லௌகீக நூல்களை மட்டும் விஸ்தரித் தெழுதி
கரந்த பால் கரந்தபடி எள்ளத்தனையும் கள்ளமின்றி விள்ளவுரைத்து இகத்
திலே சுகத்தையடைய முயன்றனர் என்று தெரிகின்றது. இயல்வேத
மென்பது வம்பில் வரவழைத்து நான் சேர்த்துக்கொண்டதே யென்றும்,
திராவிடர் இயல்வேத முடையவரென்பதற் கோர் அத்தாட்சியுமில தென்
றும், அவ்வழியாகப் பார்க்கின் ஒவ்வொரு மதத்தினரும் இயல்வேதமுடை
யாரே யென்றும், பொதுவாய் ஆரியவேதத்தையே திராவிடர்களும் உடை
யவரென்றும், தனித்தோர் மதத்தை யுடையவர்களென்றும், யூகிப்பதற்கு
ஆதாரமின்றேல் விட்டுவிடவேண்டுமென்றும், யோசிக்கு மிடத்து மதமே
நிராதாரமான விஷயமென்றும், என்னை அதைரியப் படுத்துவோர் அநேக



ரிருக்கலாம். எங்ஙனமாயினுமாகுக, திராவிடர்கள் இப்பொழுதிருக்கும்
சமயங்களிலே முன்றனிலும் சார்ந்திருக்கவில்லை யென்பது திண்ணம்.
* இப்பொழுது நாம் வணங்குகின்ற பிரமா, விஷ்ணு, உருத்திரன் இந்திரா
தி தேவர்களெல்லாம் ஆரியர் வணங்கிய தேவர்களேயன்றித் திராவிடர்கள்
வணங்கிய தெய்வங்களல்லவென்று விசாரணையுள்ள எவர்களுஞ் சொல்வர்.
இம்மொழிகளும் வடமொழிகளே யன்றித் தமிழ் மொழிகளல்ல. தமிழில்
எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குக் கடவுள், இறைவன், ஐயன், ஆண்
டவன், முதல்வன் என்னும் பெயர்களே வழங்கற் குரியவை. காலமாறு
தலினால் யாவும் தலைகீழாய் மாறிவிட்டது. ஆனால், இப்பொழுது வீரன்
முதலிய துஷ்ட தேவர்களை ஆரியரும் வணங்குகின்றனர். சிவப்பாயிருக்
கின்ற ஆரியனுக்குக் கருப்பாயிருக்கின்ற தெய்வ வணக்கம் எப்படி வந்
ததோ தெரியவில்லை. திராவிடரைத் திருப்தி பண்ணும் பொருட்டே
யன்றி வேறென்னை. அப்படியே நாமும் ஆரிய தெய்வங்களை வணங்
கினோம். கிருஷ்ணன், விஷ்ணு, இராமர் கருப்பு நிறமே. முருகன் முத
லிய கடவுளும் திராவிட தேவர்களே யன்றி வேறில்லை. வாசுதேவன்,
விஷ்ணு, உருத்திரன் என்னும் ஆரியநாமங்களை வணங்கலாம். கடவுளுக்கு

---

* ஆரியர் வண்டு வந்ததின் பின்னரே திராவிட சமயத்திலும், அவர்
களது சாஸ்திரங்களிலும், தத்துவ ஆராய்ச்சிகளிலும், மதக்கொள்கைகளி
லும் கலந்து மத சம்பந்தமான புதுப் புத்தகங்களைப் பெருக்கியிருக்கின்ற
னர் என்பதை ஆட்சேபிப்பதற்கில்லை. ஆரியருக்குப் பின்னர் சமண
ரும், பௌத்தரும், சைவ வைணவர்களும் ஒருவர்பின் னொருவராய்ப் பற்
பல புது நூல்களியற்றிக் கடைச்சங்கத்தின் காலத்திற்றானே பல வட
சொற்களையும் அவர்கள் மதக் கொள்கைகளையும் அபரிமிதமாய் நுழைந்து
விட்டனர். பிங்கலந்தை முதலிய நிகண்டுகளிலே தெய்வப் பெயர்த் தொ
குதியிலும், மக்கட் பெயர்த் தொகுதியிலும், வட சொற்கள் விசேஷித்
தும், ஏனைய தொகுதிகளில் வடசொற்கள் குறைந்துமிருப்பதற்கு மதத்
தின் விபரீத அபிவிர்த்தி அநேகமாய்ப் பிற்காலத்தில் ஆரியராலேயே
செய்யப்பட்ட தென்பதற்கோர் அத்தாட்சியாயினு மாகலாம். சைவ வை
ணவ சமய நூல்களாகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம்
முதலிய நூல்களாலும், பாரத இராமாயணாதி புராணேதிகாசங்களாலும்,
வடசொற்கள் இன்னும் அதிகரித்தன. ஆதலின் ஆரியர் வந்தபின்பு
நமக்குண்டான முக்கிய பிரயோஜனம் வடமொழியின் கலப்பொன்று
தான் என்று தெளியத்தக்கது. தமிழ் மூன்னூல்களைப் பார்க்கப் பார்க்க
வடசொற்கள் குறைவுபடுகின்றன. இதனால் ஓர் காலத்தில் இத்தமிழ
கத்தில் தனித் தமிழும், தமிழ் நூற்களும், தமிழ் மதமும், அவர்கள்
வழக்க பழக்கங்களும், ஜாதி சமயாசாரங்களும் இருந்திருக்க வேண்டு

எவ் வார்த்தையைச் சொல்லி ஸ்தோத்திரஞ் செய்யினும் குற்றமில்லை. ஆனால் நாம் இத்தகைய பதங்களை வழங்குவோமாயின் சில சமயங்களில் விஷ்ணுருத்திராதி நாமங்கள், பலசமய பேதங்களையும், கொள்கைகளையுங் காட்டி நம்மைப் பிரித்துச் சமயச் சண்டைக்கு ஏதுவாக்குகின்றன. கடவுளை விஷ்ணுவென்று சொல்வோமாயின், அது ஈசுரனானவன் சர்வவியாபி என்னுமோர் உத்தம அர்த்தத்தையே தருவதேயாயினும் மற்றோர் வழியில் இதற் கெதிர்மறையாய் விபரீத அர்த்தமாகி சதுர்ப் புஜங்களோடு இலக்குமி சமேதனாய் சங்கு சக்ர கதாபாணியாய் நீல மேக சாமள வர்ணனாய் வைகுண்டத்தில் ஆதிசேஷன் பேரில் படுத்திருக்கின்ற ஓர் அவதார சரித்திர நாமங்களைக் குறிப்பிடுகின்றது. கடவுளைச் சிவனென்று சொல்வதையும் இங்ஙனமே சரித்திர விகாரங்களோடு விவகரிக்கலாம். இவையனைத்தும் தாந்திரீக சாஸ்திரங்களென்றும், தத்துவார்த்தங்களுடையனவென்றும், சிலர் சமத்காரமான பதில் சொல்லினும் பிரயோஜன மொன்றுங் காணோம். சாதாரண ஜனங்களின் நம்பிக்கையும் இங்ஙனமே விபரீத வழியில் வேரூன்றிவிட்டது. அவ்வேரைக் களைவது வெகு கஷ்டமாகவேயிருக்கின்றது. திராவிடர்கள் இவற்றையெல்லாம் நம்பவேண்டு

---

மென்று எவர் மனத்திற்குத்தான் படாமலிருக்கின்றது. ஆரியமதம் வேரூன்றியபோது கல்வி மேம்பாடுற்றது. ஆரியமுனிவரின் சிஷ்டாசாரமும் ஓங்கியது அக்காலமே. தமிழ் மக்களும் எதார்த்த குணத்தைக் காட்டிப் புதிதாய் வந்தவரைப் போற்றிப் புகழ்ந்தனர். இத்தகைய காரணங்களினால் ஆரியருக் கோர்விதத்தில் தமிழ் நாட்டில் தலைமை ஸ்தானமேற்பட்டது. பூர்வ குடிகளாகிய திராவிடர்களோ தலைமைக்குப் போட்டிபோடாது எதார்த்தமாயிருந்து நாளடைவில் க்ஷீணித்து இறுதியில் ஏவல்செய்து ஜீவிப்போராகவும் விவசாயஞ் செய்வோராகவும் மாறிவிட்டனர். பிராமணரின் பிரயோஜனார்த்தமாக சைவ வைணவ ஆலயங்களெங்கும் பெருகின. புராணங்களும், பிரபந்தங்களும் புது வழியில் அதிகரித்தன. லௌகீக வாழ்க்கையைத் திராவிடர்கள் வெறுக்கவாரம்பித்தனர். வர்ணாசாரம், மதாசாரம், புது வழியில் பிரபலித்தன. பூர்வ குடிகளாகிய திராவிடர்களோ ஒரே நிலைமையிலிருந்துவிட்டனர். தமிழ் நாட்டில் ஆரியரால் மதவிஷயத்தில் ஏற்பட்ட ஏற்றமும் மற்றோர் விதத்தில் ஜாதிசமயாபிமானமும் மேலிட்டு பல கெடுதிகளும் வியாபித்தன. திராவிடர்கள் நெடுநாளாய் நாகரிக வளர்ச்சி குன்றி ஒரே தன்மையடைந்ததற்கு இதுவே காரணம். பழைய திராவிடர்களுக்குள்ள மதநிலைமையை நன்கறிந்துகொள்ள அவ்வப்போது வழங்கி வந்திருக்கின்ற தமிழ்ச் சொற்களின் ஆராய்ச்சியும் அவ்வப்போது பிறந்த தமிழ் நூற்களின் ஆராய்ச்சியும் அவசியமென்பதற் கையமில்லை.



மென்பதற்குப் பூர்வீக திராவிட கிரந்த வாதாரங்க ளொன்றுமில்லை. இருப்பதாகக் காட்டுவாருளரேல் அவர் கொள்கையும் அங்கீகரிக்கலாம். அங்ஙனமின்றி நிராதரவான விஷயங்களை எப்பொழுதும் நம்பிக்கொண்டிருப்பதற்கு நியாயமில்லை. மானுடருக்கு அறிவு விர்த்தியாவதற் கேற்றபடி விசாரணையும் விரிந்தோங்குமன்றோ? அன்றிக் கடவுளை அறிவதற்கு நமது இயற்கை யறிவே போதுமானது. இதுவுமன்றி, "உலகமே நமது வீடு, நன்மை செய்வதே நமது மதம்" என்றபடி நம்மாலியன்றமட்டும் உண்மையைப் பின்பற்றுவதே நமது கொள்கையாயிருக்கவேண்டும். இன்றேல் இந்த ஜென்மத்தால் பயனில்லை.

---

## கடவுள் வணக்கம்.

---

இவ்வுலகத்திலுள்ள பலரும் தத்தம் வருணத்திற்கும், இடத்திற்கும், மதத்திற்கும், அறிவொழுக்கங்களுக்குந் தக்கபடி ஏதோ ஓர் வழியில் கடவுளை வணங்குகின்றார்கள். நாம் மானிடராய்ப் பிறந்ததற்கு முக்கிய பிரயோஜனம் கடவுளைத் தொழுவதைத் தவிர வேறொன்றில்லை. கும்பிடுதல், வணங்கல், தொழுதல், போற்றல் முதலிய பதங்கள் தமிழ்ப் பதங்களே யாயினும், இப்பதங்கள் பிரமோபாசனைக் குரியதான வந்தனம், தியானம், பிரார்த்தனை முதலிய சாதாரண அர்த்தத்தைக் கொடுக்கக்கூடுமேயன்றி வேறில்லை. "விக்கிரகம்" என்னும் பதமே தமிழிற் கிடையாது. அப்படியிருக்க திராவிடனுக்கு விக்கிரக பூஜை எப்படி வந்தது? ஆதலின், விக்கிரகாராதனை பிற்காலத்ததென்பதிற் சந்தேகமில்லை. விக்கிரஹாராதனை யின்றேல் சைவ வைணவ சமயங்கள் கீழே விழுந்துபோமென்று அநேகர் அஞ்சுகின்றார்கள். அதற்காகவே நம்மீது கோபிக்கின்றனர். ஒருவர்க்குப் பயந்து எதார்த்தத்தை மொழிப்பதில் காரியமென்னை? உண்மையைச் சொல்லுமிடத்து ஆரியர் வந்தபின்னரே சைவ வைணவ சமயங்களென்றும், ஆராதனை யென்றும், அபிஷேகங்களென்றும், உற்சவ ஊர்கோலங்களென்றும், தாசி வேசிகளின் ஆட்டபாட்டங்களென்றும், கணக்கற்ற வைதிக பண்டிகைகளென்றும், அவற்றை நடத்த ஓர் தனி வகுப்பினராகிய பிராமண புரோகிதர்களென்றும், அர்ச்சகர்களென்றும், கற்பிதப் புராணங்களென்றும், புராணப் பிரசங்கங்களென்றும், விக்கிரகப் பிரதிஷ்டை யென்றும், கும்பாபிஷேகமென்றும், பற்பல பெயர்களால் மென்மேலும் அதிகரிக்க வாரம்பித்தன. இப்பொழுது "மதம்" என்னும் பெயரால் வீடுகள் தோறும் செலவுகளதிகரித்து

வீண் செலவுக்கும் வறுமைக்கும் வழியானதுவுமன்றித் திராவிட தேசமுழுமையும் போலியாசாரங்களாகிவிட்டன. * இதுவுமன்றி பழைய காலத்

---

* மதமென்றால் கொள்கை, அறிவு, பெருமை முதலிய நல்ல அர்த்தத்தோடு வெறி, கொழுப்பு, செருக்கு, உட்பகை, பைத்தியம், விகாரம், என்னும் விபரீத அர்த்தங்களுமுள. இந்த அர்த்தங்களுக் கேற்றபடியே திராவிடர்களுக்குள்ளும் வெவ்வேறு மதங்களாய் மாறின. இம்மட்டோ பூர்வம் தொழில் வேறுபாடேயன்றி இந்நாட்டில் ஜாதிகுல வேறுபாடுகளில்லை, சமய பேதங்களுமில்லை. ஆரியர் வருவதற்கு முன்னரே சுகவாழ்விற்கு இன்றியமையாத பல சௌக்கியங்களும், பரிசுத்த ஆஸ்திக மதமும், நல்லொழுக்கமும், நாகரிகமும் பொங்கியிருந்தனர். ஆதியிற் குடியேறின ஆரியர்கள் மகோன்னத ஸ்திதியிலிருந்த திராவிடர்களிடத்தில் அநேக விஷயங்களைக் கற்றுத் தெளிந்தும், வடமொழியைச் சமயானுகுணமாகத் திருத்திக்கொண்டும், பின்னால் புலவிதத்திலும் அபிவிர்த்தியடைந்தனர். வடமொழியைத் திருத்தினதும் அப்பாஷையிலே பல புத்தகங்களை எழுதினதும் பொய்யென்று சிலர் சொல்லவுங்கூடும். சைவ சம்பந்தமான அறுபத்துமூன்று நாயன்மார்களும் வைணவ சமயாசாரிகளாகிய பன்னிரண்டாள்வார்களும் பேசின பாஷை எது? அவர்களிருந்த இடங்களெவை? அவ் விவகாரங்கள்கூட தேவ பாஷையாம், சமஸ்கிருதத்திலிருப்பதற்கு நியாயமென்ன? ஆகையால் திராவிட தேசபாஷையிலுள்ளதையும், தேச விவகாரங்களையும், ஆரியர் எழுதிவைத்துப் பெருக்கிக்கொண்டதாம், கற்றுத் தெளிந்ததும் பொய்யெனில் ஒருபோதும் பொருந்தாது. இவ்வண்ணம் திராவிடர்களிடம் ஆரியர் முதலில் கற்றுக்கொண்டதுபோய் பின்னால் அவர்கள் கற்றுக்கொடுப்போராகி சகல ஜாதியார்களுக்கும் குருஸ்தானமாகி எவ்வழியிலும் திராவிடர்கள் கடைத்தேறுவண்ணம் வர்ணாசிரம தர்மமென்னும் நிர்ப்பந்த சட்ட திட்டங்களை யேற்படுத்தி திராவிடருக்கில்லாத பிம்பாராதனை செய்ய வழிகாட்டினார்கள். அவர்கள் இடைவழியிற் கற்பித்த அர்ச்சையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்களேயன்றி இத்தேசத்தார் பூர்வீக நல்ல வழக்கங்களை அநுசரிப்பதில்லை. ஆரியர் ஈண்டுவருவதற்கு முன் சூத்திரரென்னும் பதமே தமிழிலிருந்திருக்கவில்லை, இப்பதம் ஆரியர் முதலில் குடியேறிய தேசத்திலே இருந்த தாழ்ந்த ஜனங்களுக்கு ஒருவாறு இட்டுவழங்கியிருக்கலாம். அப்படிப் பார்ப்பினும் ஆரிய சூத்திரருக்குத்தான் சூத்திரரென்னும் பெயர் பொருந்துமேயன்றி மற்றவர்கட்கு அப்பெயர் பொருந்தாது. திராவிட தேசத்திலே வேளாளர் முதலியவர்கள் நன்னிலையிலிருந்துள்ளார்கள். பள்ளர், பறையர் முதலியவர்கள் இவர்கட்குப் பணி செய்தனர். இப்பறையர் முதலியவர்களுங்கூட இத்தேசத்திலே தாழ்ந்த ஜாதியினரென்பதற்கில்லை.



திலுங்கூட நம் முன்னோர்களால் கட்டப்பட்ட அம்பலங்களென்னும் ஆலயங்களில், அருட்குறி நிறுத்தி வணங்கிய விடமென்று ஒருவாறு தெரிகிறதேயன்றி இக்காலத்திலிருக்கும் மாநுட ரூபங்களைப்போல விக்கிரகங்கள் செய்துவைத்து வணங்கிய இடங்களாய்த் தெரியவில்லையே. முன்னாளில் தமிழ் நாட்டில் கடவுளைத் தொழுவதற்கு அமைக்கப்பட்ட அம்பலங்களிலே கடவுளை வழிபடுதற் கறிகுறியாக நிறுத்தப்பட்ட உருவிற்கு 'கந்து' என்று பெயரிட்டிருந்ததாய்த் தெரிகிறது. நச்சினார்க்கினியரும் இதற்கு தெய்வமுறையுந் தறி என்று உரைகூறினர். இப்பதத்திற்குக் கட்டுத்தறி, தூண், ஆற்றுக்கோடு, மாடுபிணைக்குங் கயிறு, யானை அணைதறி முதலிய பல

---

உயர்ந்தவரேயாவர். இத்தகைய உயர்வு தாழ்வுகளெல்லாம் ஆரியர் காலத்திற்குப் பிற்பட்ட கொள்கை என்பதற் கையமில்லை. அறிந்தும் அறியாதார்போல இன்னும் நாமிருப்ப தென்னை. சூத்திரர்களுக்கென்று அவர்கள் காட்டிய வழியிலேயே யிருந்து மெய்வருந்தித் தேடிய பொருளை அந்தணரென்போர்க்கு மட்டும் தானஞ்செய்து அன்னோர் எவரேயாயினுஞ் சரி அவர் காலில் வீழ்ந்து அடிபணிந்திருக்க வேண்டுமென்பது அவர்களில் அநேகருக்குக் கருத்தேயன்றி அவர்களுக்குச் சமத்துவமாய் இந்திய அன்னை வயிற்றிற் பிறந்த சகோதரர் சகோதரிகள் யாவருமே இருக்க வேண்டுமென்கின்ற நல்லெண்ணமிருப்பதாய்த் தோன்றவில்லை. அவர்கள் கௌரவம் எந்நாளும் சாஸ்வதமாய் நிலைப்பதற்கே பல கட்டுக் கதைகளாகிய புராணங்களை எழுதி புராண பிரபலத்திற்கும் காரணபூதராயினர். நாகரிகமான இக்காலத்திலுங்கூட அவர்களிற் சிலர் சுயநலங் கருதி கற்பித்த வழியே இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். ஆரிய மதாசாரமனைத்தும் வஞ்சனையுடையதல்லவென்றும், கோயில்களிலிருக்கும் பிம்பத்தைப் பிராமணர்களும் பூசிக்கிறார்களேயென்றும், ஆதலால் அர்ச்சை சிஷ்டாசாரமேயென்றும் சிலர் சொல்லக்கூடும். ஆனால் எல்லாப் பிராமணர்களும் அங்ஙனஞ் செய்யவுமில்லை. எழுதிவைக்கவுமில்லை. யாதோ சுயநலங் கோரியே சிலர் மட்டும் விக்கிரகத்தைத் தொழுகின்றார்களேயன்றி வேறில்லை. இருப்பினும் பிராமணர்களை மெய்ஞ்ஞானிகளென்பதற்கு அறிகுறியாக மூன்று வேளையும் பிரமகாயத்திரி மந்திரங்களை ஜெபித்துக்கொண்டு மற்றவர்களையும் அங்ஙனமே செய்யச்சொல்லாது விக்கிரகாராதனை புரியச்சொல்லிவருவது விந்தையன்றோ? திராவிடர் விக்கிரகாராதனைசெய்ய பழைய கிரந்தங்களில் விதியொன்றுமில்லை. விதியில்லாதபோது விக்கிரகாராதனை யிருந்திருக்க நியாயமில்லை. இருப்பின், நாம் பின்பற்ற வேண்டியதே. தொல்காப்பியரும், திருவள்ளுவரும் மற்றப் பெரியோர்களும் ஈசுரனைப் பொதுவாகத் தியானித்தேயுள்ளார்கள். சைவத்தில் நாயன்மார்களும், வைஷ்ணவத்தில் ஆள்வாராதிகளும் சைவ வை

வித அர்த்த பேதங்களுள. அக்காலத்து அம்பலங்களிலே ஏதோ ஓர்வித அருட்குறி நிறுத்தி வணங்கியதாய்ப் பாவிப்பதற்கும் சரியான ஆதாரமில்லை. மனிதர்களுக் கியற்கையாய் மனத்தின்கண் உதிக்கும் ஆஸ்திக மதத்திற்கு மூலகாரணமான எண்ணங்களையே ஓர் பற்றுக்கோடாய்க் கொண்டு அதனையே ஆகுபெயராக "நந்து" என்னும் பெயரால் அக்காலத்தில் வழங்கியிருக்கக் கூடும். இவ்வழியாகப் பார்ப்பின் பூர்வீக தேவாலயங்களிலே ஓர் குறியுமின்றி அதாவது தற்காலத்திய நற்பாங்கடைந்த ஜாதியார்களைப்போல ஈசுரனைத் தியானிப்பதற் குரித்தான உபாசனை மண்டபங்களாக இருந்திருக்கவேண்டும். நாகரிகம் நிரம்பிய பண்டை நாளி

---

ணவ கோயில்களிலிருக்கும் பிம்பங்களைப் பற்றிப் பாடியிருக்கின்றார்களே. அவைகளே விக்கிரகாராதனைக் கோர் ஆதாரமன்றோ வெனில் அவைகளெல்லாம் ஆரியர் வந்தபின் வெகு காலத்திற்குப் பிற்பட்ட சமீபகால விவகாரமாகையால் ஆதாரமாகாது. இதுவுமன்றி அவர்கள் பிரமக்கியான விசாரணையில்லாத ஞானசூன்யர்களாவென்று சிலர் வினவக்கூடும். அவர்கள் தீர்க்க விசாரணையுள்ளவர்களே யென்று வைப்பினும் அவர்கள் காலத்தினுங்கூட விசாரணை குன்றிய ஜனங்கள் பலரிருந்து அவர்களை அசைரியப்படுத்தியிருக்கக்கூடும். ஜனங்களிருக்கும் நிலைமைக்குத் தக்கபடி, பற்பல பாடல்களைப் பாடி காலத்திற்குத் தக்கபடி யிருந்திருப்பார்கள். இருப்பினும் அவர்கள் அருளிச்செய்த சில பாடல்கள் ஆழ்ந்த கருத்தையும், புதை பொருளையும், தத்துவ ஞானத்தையும், பிரமத்தியானத்தையும், நமக்கு எக்காலத்திலும் ஊட்டக்கூடியவைகளா யிருக்கின்றன. ஆதலால் சர்வ சமய சமரசமாக பிரமஞானத்தைமட்டும் நமக்குப் போதிக்கக்கூடிய பாடல்களை நாம் போதிக்கவேண்டும். தீயவைகளை நாம் விலக்கவேண்டும்.

## திருவாசகம்.

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றா
னுலகேழெனத் திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

சுந்தரத் தின்பக்குயிலே சூழ்சுடர் ஞாயிறுபோன்று
மந்தரத்தேநின் றிழிந்திங் கடியவ ராசையறுப்பான்
முந்து நடுவு முடிவுமாகிய மூவரறியாச்
சிந்தூரச் சேவடியானைச் சேவகனை வரக்கூவாய்"



னும் மக்களைப்போல விக்கிரகங்கள் செய்துவைத்து வழிபடுதலில்லை என்று தெரிகின்றது. காணவுங் கருதவுங்கூடாத முதல்வனுக்கு அவரவர்கள் நினைத்தவாறு உருக்கள் செய்துவைத்து வணங்கல் பொருந்தாதென்று நினைத்து எங்கும் நிறைந்த முதல்வனை ஓர் பிழம்பாகக்கொண்டு வழிபடுவதற்கறிகுறியாக பிழம்புவடிவான நந்துநூலை நிறுத்தியும், மனத்தின்கண் தியானித்தும் வந்தார்களென்பதைப் பூர்வீக திராவிட கிரந்த பரிசீலனையுள்ளவர் யாவருமே ஒருவாறு ஒப்புக்கொள்ளுகின்றனர். நந்துநூலை நிறுத்தினார்களென்று சொல்வதை ஈசுர தியானத்திற்கு ஏகதேச உபமானமாகக் கொள்ளவேண்டுமேயன்றி வேறில்லை. அக்காலத்தில் திராவிட மதஸ்தருக்கு நல்லொழுக்கமும் அருட்குணமுமே பிரதான தர்மமாயிருந்தது. உண்மையான திராவிடனுக்கு ஆலயமுமில்லை. கடவுள் வசிக்குமிடங்களென வெவ்வேறு இடங்களுமில்லை. ஈசுரன் வாசஞ்செய்வது அவரவர்களின் மனமேயன்றி வேறில்லை யென்று நான் சொல்லக்கூடிய பரிசுத்தநன்னிலையில் இருந்தது. இப்பொழுதும் பூர்வீக ஒழுக்கத்தைப் பின்பற்றக்கூடிய திராவிடன் தன்னிருதய மண்டபத்தை நிலையான நட்பு, நன்றியறிதல், பணிவு, அன்பு, பக்தி, வைராக்கியம், முதலிய தெய்வீகக் கடமைகளாகிய நல்ல வாசனையுள்ள பல புஷ்பங்களினால் அலங்கரித்து வைக்க முயல்வான். ஆரியர் போதனைகளின்பேரில் ஆக்கப்பட்ட ஆலயங்களின்

---

## திருவாய்மொழி.

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமரர்களதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

திருமா னான்முகன் செஞ்சடையா னென்றிவர்க ளெம்
பெருமான் றன்மை யாரறிகிற் பார்பேசி யென்
ஒருமா முதல்வா வூதிப்பிரா னென்னையா ளுடையக்
கருமா மேனிய னென்பனென் காதல் கலக்கவே.

இத்தகைய பாடல்கள் அநேகமுள. கிரந்த விஸ்தீரணத்திற் கஞ்சிவிடுகின்றேன். விருப்பமுள்ளவர்கள் திராவிட புத்தகங்களிலே ஆங்காங்கு கண்டு தெளியலாம். திராவிட வேதமெனப் புகழப்படும் திருக்குறளிலே

விசித்திர வேலைகளிலும், மானுட சரீரமாகிய நமது ஆலயம் கடவுளுடைய அநுக்கிரகத்தினால் மிக விசித்திரமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், இந்த இருதயக் கோயிலை எந்நாளுங் கெடாமல் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டியது திராவிடரின் முதற் கடமையாகும். வெளி ஆலயத்திற்கு அழிவிருப்பினும் உண்மையான ஆத்மாலயத்திற்கு ஒரு போதும் அழிவில்லை. இவ்வாலயமோ கடவுளினுடைய சொந்தக் கைவேலை ஏனைய ஆலயங்களோ அங்ஙனமல்ல, பாமர ரஞ்சிதமானவை. ஓ! கல்வி கேள்விகளிற் சிறந்த திராவிட சகோதரர்காள்!! பழந்தமிழ்க் குடிகளைப்போல ஈசுரனை ஆத்மாலயத்தில் வைத்து தியான மார்க்கத்தால் ஏன் ஆராதித்தவரப்படாது? ஆரியரின் மத்தியகால போதனைகளின்பேரில் ஏற்பட்ட சாதி சமயாசாரங்களுக் கெல்லாம் இடங்கொடுத்து மானுஷீகத்திற்குரிய பொது மார்க்கத்தை இழந்து கணக்கற்ற பிரிவுகளாய்ப் பிரிந்து பிறந்த தேசத்திலேயே ஒருவர்க்கொருவர் பகைவர்களாகிப் போராடுவதற்குத் தனித் தமிழ்க் கிரந்தங்களில் ஓராதாரமுங் கிடையாது. இருப்பின், பண்டிதோத்தமர்கள் வெளிப்படுத்தி என்கொள்கை தவறெனில் திருத்திக் கொள்ள சித்தமாகவே யிருக்கின்றேன். ஆனால் பழந்தமிழ்க் குடிகளிலே வீராராதனை யென்பதுமுண்டு. அதாவது, ஆத்மப் பரித்தியாகஞ்செய்யும் வீரருக்கு "வீரக்கல்" நடுதலும், அக் கல்லுக்குக் கோயிலும், மதிலும், மற்றச்சீரும், சிறப்புகளும் செய்தலும், மலரும் மதுவும் வைத்துப் படைத்து உற்சவங் கொண்டாடிக் கழித்தலும், பத்தினி தேவிமாருக்கு ஞாபகார்த்த

---

சகல மதஸ்தரும் அநுசரிக்கவேண்டிய சமரச ஞானம், சன்மார்க்கப் பிரவர்த்தனம், சர்வஜன சகோதரவாச்சல்யம், சித்த சமாதானம் முதலிய பல சுகுணங்களை நமக்குக் கற்பிக்கும்போது அதனினும் தாழ்ந்த கிரந்தங்களின் ஆதாரங்கள் நமக்கேன்! அன்னிய மதப்பற்றேன்! பகையேன்! "திருவள்ளுவர் மதமே" திராவிட மதம். இத்திராவிட மதமே பிரபஞ்சத்தின் சமரச மதம். இத்தகைய நூல்களைப் பின்பற்றுவதினால் திராவிடர் முதல் யாவருமே ஒரே மதம், ஒரே குடும்பம், என்று சொல்லும்படியான அத்தகைய உத்தம ஒற்றுமையை நமக்குண்டாக்குமே. திருக்குறளின் உட்பொருளும் மற்றச் செம்பொருளான தமிழ் நூல்களின் நற்கருத்துகளும், எல்லாச் சாதியாருக்கும், எல்லாச் சமயத்தினருக்கும் இன்றியமையாதுவேண்டற்பாலதே. ஜனங்களியல்பு காலங்கடோறும் வேறுபாடடைவதுபோல மதங்களும் அவ்வாறே வேறுபாடடையும் இயல்பினவென்று அறிந்தே திருவள்ளுவர் முதலிய திராவிட மகான்கள் மதவிஷயத்தில் சகல மதஸ்தர்களுக்கும் பொதுவாயிருக்கும்படி சொல்லியுள்ளார்கள். பூர்வீக திராவிடர்கள் மதமும் இத்தகைய நன்னிலையிலிருக்கும் போது நாம் இடையில் வந்த தகாதவழியை ஏன் பின்பற்றவேண்டும்.



மண்டபம் சமைத்தலும், அன்னோரைப் பத்தினிக் கடவுளென வணங்குதலும், பழந்தமிழர் ஐதீகமே. எனினும் இது முற்றிலும் ஈசுர ஆராதனையைக் குறிக்காது. கற்பைப்பற்றி தமிழிலே மிகச் சிறப்பித்து எழுதப்பட்டிருக்கின்றது. கற்புடைய மகளிரைக் கௌரவித்ததுபோலவே வீரத்தன்மையுள்ளாரையும் கௌரவித்து மிகச்சிறப்பித்தனர். "என்னை முன் னில்லன்மின் றெவ்வீர் பலரென்னை-முன்னின்று கன்னின் றவர்" என்னும் திருக்குறளினால் பண்டைக் காலத்தில் படைச்செருக்குற்று போரேற்று நின்று பகைவர் வேல் பட்டு வீழ்ந்து கல்லினிடத்தே நின்ற வீரர் அநேகரென்று தெரிகின்றது. ஐயனார், மதுரைவீரன், கருப்பண்ணன், மாரி, வீரி, பிடாரி, காட்டேரி முதலிய துஷ்ட தேவிகளும், தேவர்களுமே திராவிட தெய்வங்களென்றும், பூர்வீக திராவிட மதமும், ஆசாரமும் இத்தன்மையது தானென்றும், கற்றறிந்த விவேகிகளும், சொல்லும்படியான சரித்திர ஞான சூன்யத்திலோ திராவிட தேசம் வந்துளது! தற்சமயத்திய தாழ்நிலையை விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன்.

---

## திராவிடர்களின் சுவர்க்க நரக யூகை.

---

நன்மை தீமைகளைப் பகுத்தறியும் இயற்கையறிவையும் நல்லொழுக்கங்களையும் ஈசுரன் அங்கீகரிப்பார்; தீய வொழுக்கங்களை வெறுப்பார் என்னும் நம்பிக்கையும், நன்னடக்கைக்குச் சன்மானமுண்டென்றும், அஃதிலார்க்குத் தண்டனை யுண்டென்றும், நினைக்கும் பரமார்த்த எண்ணமும் இம்மை, மறுமை யுண்டென்னும் யூகைக்கு ஆதாரபூதமாகும். பசியைத் தீர்க்க ஆகாரமும், தாகத்தைத் தணிக்க ஜலமும், துக்க நிவிர்த்திக்குத் தேற்றுதலும், வேண்டியிருப்பதுபோல நமது நற்குண நற்செய்கைகளுக்கும், நல்ல நடை உடை பாவனைகளுக்கும், தக்க சன்மானிப்பு இகபரமிரண்டினும் வேண்டியதாயிருக்கின்றது. இவ்வுலகத்திலே நாம் அடையக்கூடிய சுகமனைத்திலும் மாசு மறு வற்ற மனத் திருப்தியே பிரதானமென்பதிற் பிழை யில்லை. இவ்வுலகத்திற் போதுமான திருப்தியின்மையினால் பலரும் இம்மைச் சுகத்தை அருவருக்கின்றார்கள். இங்கே பூரண சுகம் கிடைக்காததினால் மறுமைச் சுகத்தை மனத்தால் யூகித்துச் சிலர் எதிர்பார்க்க ஏதுவாகின்றது. நமது அறியாமை முழுதும் நீங்கப்பெற்று முதல்வன் அருளோடு ஒற்றுமைப்படுதலே முத்தியின்ப மென்பாரும், மேன்மேலும் சற்குணங்கள் அபிவிர்த்தியாகி கடவுளினது சமீபத்தை அடைவதே மோக்ஷமென மொழிவாரும், முத்தி யென்பதற்கு இன்ப

துன்பங்களை விடுதல் அதாவது எல்லாப் பற்றுகளையும் விட்டு அடையுமிடமெனக் காரணப்பொருளுரைப்பாரும், வீடு என்னும் தமிழ்ப்பெயரின் பொருளும் எல்லாஇன்பங்களையும் விட்டுவிடுவதே மோக்ஷமென்றும் இதைவிட வேறு மோக்ஷமில்லை யென்பாருமாக விருக்கின்றனர். ஈசுரனே சர்வ மங்கள குணங்களுக்கும் இருப்பிடமாயிருப்பவர் எவ்வளவுக் கெவ்வளவு நமக்குச் சற்குணங்களுண்டாகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு ஈசுரனுடைய சாமீபத்தை நாமும் அடைகின்றோம். நமக்கு உயர்வும், நிர்மலமான ஆத்மாநந்தமும், இகபர சுகமும், பெருகுவதற்கு நமது நற்குணங்களைத்தவிர வேறு ஆதாரமொன்றுமில்லை யென்று இதனால் நன்கு விளங்குகின்றது. ஜீவ சிருஷ்டியானது ஆநந்தத்தைக் கொடுப்பதற்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்று பக்த சிரேஷ்டர்களெவரும், சொல்லுகிறபடி நமது செய்கைகளை நாளொருவண்ணம் திருத்திக்கொண்டுபோகவேண்டும். திருக்குறள் என்னும் திராவிட வேதத்திலே நல்லொழுக்கத்தைத் தவிர வேறு மோட்ச நரகங்களைப்பற்றி விபரீதமா யொன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. வைகுண்டம், கைலாசம், முதலிய ஸ்தல விவரங்களைப் பற்றியும், புராதான எந்த திராவிட நூல்களிலும், நன்கு காணப்படவில்லை. தமிழ்ப் பாஷையில் பொதுவாய்க் கடவுளொருவ னுண்டென்னும், நம்பிக்கைக்குரிய சொற்களும், ஆத்மார்த்தத்திற்குரிய சில சொற்களும், உண்டேயன்றி அந்தக் கரணங்களையும், மனோபாவங்களையும் விவரிக்கும் விநோதச் சொற்களில்லை. அதற்கெனப் பல புஸ்தகங்களுமில்லை. மோக்ஷ நரகங்களை உணர்த்தும் சொற்களைத் திராவிடர்கள் அறியார்கள். ஆத்மஞானமுண்டானதாய் நடிக்கவுமில்லை. சுவர்க்க நரகம் என்னும் பதங்களும் தமிழல்ல. அதற்குப் பதிலாக நன்மை தீமை யென்னும் எதார்த்த பதங்களுண்டு. எக்காலத்திலும் ஒழுக்கத்திலே பிரக்கியாதி பெற்றவர்கள் திராவிடர்கள் என்பதற் கையமில்லை. திராவிடர்கள் பூர்வீக வாசனை போகாது எதார்த்தவாதிகளாகவே இந்நாளிலும் அநேகமாய் இருந்துவருகின்றார்களென்று புகழப்படுவதற்கு நாம் சந்தோஷிக்கவேண்டும். ஆகையால் திராவிடர்கள் ஆரியரின் கற்பனா அலங்கார கிரந்தங்களையும் போதனைகளையும் பின்பற்றி வாழ்நாள் முழுவதும் வீணேபோக்கி விபரீத மதவிசாரணையிலிறங்கி இகலோக சுகத்தை முற்றிலும் வெறுக்காமல் நாம் பரிசுத்த லௌகீகர்களாயிருக்க முயலவேண்டும். மாசுமறுவற்ற லௌகீகமும் நம்மை எப்படியோ ஓர் வழியில் மோக்ஷமண்டலம் சேர்ப்பிக்கும். பரலோக மோக்ஷத்தில் அநேகருக்குச் சந்தேகமெனினும் பூலோக மோக்ஷத்தில் எவர்க்கும் சந்தேகமில்லையே. நாம் மானுடராய்ப் பிறந்ததற்கு அதற்குரிய மானுஷீகக் கடமையை நாம் நன்கு நிறைவேற்றினோம் என்னும் ஆத்ம திருப்தியும் மனச்சந்துஷ்டியும் வேண்டும். இஃது சாமான்னியமன்று. இத்திருப்தி எளிதிற் கிடைத்துவிடின் வேறு மோக்ஷத்திற்காக முயலவேண்டுவதில்லை. அறியாது செய்த குற்றத்தைக் குறித்து மனங்



கசிந்துருகி வருந்துவதே மானிடருக்குப் போதுமான நரக தண்டனை யென்பதிற் சந்தேகமில்லை. வேறு நரகமென்பதும் வேண்டியதில்லை. மரணத்தறுவாயில் அவரவர் செய்த நன்மை தீமைகளை நினைந்துருகி வருந்ாதவரெவர்? பாவஞ்செய்யும் பொழுதெல்லாம் நம் மனமே நம்மைச் சுடுகின்றது. புண்ணியம் புரியும்பொழுது நம்மை நம் மனமே புகழ்ந்து பூரிக்கச் செய்கின்றது. ஆதலால், சுவர்க்க நரகம் இகத்திலேயே இருக்கின்றது. பிற் சில சமயத்தார் மோக்ஷ மண்டலமென்பது தனித்து எவ்விடமோ இருப்பதாகச் சொல்லி பிரமிக்கச் செய்கின்றார்கள். பூர்வீக திராவிட மதஸ்தர்களோ ஒவ்வொருவரின் மனத்தின் கண்ணும் சுவர்க்க நரகமிருப்பதாக நினைத்து அவரவர் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நடந்து சத்திய காமிகளாயிருக்க முயன்றுள்ளார்கள். இக்காரணத்தாற்றான் சுவர்க்க நரகங்கள் இத்தன்மை யுடையன வென்றும், எங்குள்ளன வென்றும் விவரமாய்த் திராவிட கிரந்தங்களொன்றும் நன்கு விளக்கிவைக்கவில்லை. புண்யாத்மாக்களும், பாபாத்மாக்களும் வசிக்குமிடங்களை சுவர்க்க நரகமென்று ஆரியசமயாபிமானிகள் சொல்வார்களாயின் அஃது இப்பிரபஞ்சத்தைத் தவிர வேறு எவ்விடத்திலிருக்கின்றதோ தெரியவில்லை.* பூர்வீக திராவிடர்களைப் பின்பற்றியே பௌத்தர், சம

---

* ஆரிய சமயாசாரத்தைப் பின்பற்றியபின் நமக்குச் சுவர்க்க நரகத்தைப் பற்றிய விநோத வர்ணனைகளும், புராணேதிகாச ஆதாரங்களும் பல ஏற்பட்டன. நரகமென்னும் பாதாள லோகத்திலே கருத்த முகமும் பருத்த விழிகளும், உறுத்த பார்வையும், சிவந்த கண்களும், வளைந்த தந்தங்களும், வெடித்த சொற்களும் உடைய இரக்கமென்பது எள்ளத்தனையுமில்லாத எமபடர்கள் பலர் உளரென்றும், அன்னோர் பாவிகளாகிய நம்மை வெட்டுவித்தும், குத்துவித்தும், அடிப்பித்தும், அவயவப் பழுது செய்வித்தும், விஷ ஜெந்துக்களை விட்டுக் கடிப்பித்தும், நெருப்பிற் காய்ந்த எண்ணெய்க் கொப்பரையிற் போட்டுப் பொறித்தும் இன்னும் இவ்விடத்தில் எழுதொணாத பலவித இம்சைகளைச் செய்தும், செய்வித்தும் வருவரென்று பௌராணிகர் எழுதிவைத்துள்ளார்கள். இத்தகைய பயங்கரமான வர்ணிப்புகளும் வேண்டியதே எனவும் இன்றேல், உலகத்தினர் பயப்படார்களெனவும் சொல்வாருமுளர். யாவரையும் அறியாக் குழந்தைகளைப் பாவித்துப் பூச்சிகாட்டுவதுபோல் பொய்க்கட்டுக்கதைகளைக் கற்பித்து அச்சுறுத்துவது சரியல்லவே. எப்படிப் பார்ப்பினும் இப் பயங்கரமான வர்ணிப்புகள் பாமரருக்குச் சிறிதேயன்றிப் பண்டிதருக்குத் தமாகாதென்பது திண்ணம். பூர்வீகத் திராவிடக் கிரந்தங்களிலிருந்து இத்தகைய ஆதாரங்களெடுத்துக் காட்டுவோரிலர். தருமத்தினின்று தவறியவர்களுக்குத் தக்க தண்டனை செய்து தர்மத்தைக் காத்தலால் எம

ணர் முதலிய பற்பல சமயத்தார்களும் காட்சியிலுள்ளது இவ்வுலகமொன்
றே, ஆதலால் நமக்கு நரகமும், நரகாக்கினியும், எமபடர்களும், எவுதற்
கர்த்தாக்களும் நம்மனத்தைவிட்டு வேறெவ்விடத்திலேயோ யிருந்து இம்
சிப்பதாய் நினைத்து பீதிகொள்வதில்லை. திராவிட சமயத்தின் மோக்ஷ
நரக முடிபுகளும் இங்ஙனமே பூர்வத்திலிருந்த நீரிலே உதிக்கும் நீர்க்குமி
ழிகள் நீரிலே நின்று நீரிலே ஒடுங்குதல்போல் இப்பிரபஞ்சத்திலுதிக்கும்
பல்கோடி ஜீவராசிகளும் இப்பிரபஞ்சத்திலேயே யிருந்து ஒடுங்கிவிடுகின்
றன. இவ்வாதாரத்தைக்கொண்டு பூர்வீக திராவிடர்களும் இப்பிரபஞ்
சத்தையே சுவர்க்க நரகமென யூகித்தலில் பிழை யாதோ தெரியவில்லை.
எனினும், முற்றிலும் உலகாயிதராய் இருந்தனரென் றியம்புதற்
கில்லை. மரணத்திற்குப் பின் நிலைமையைப் பற்றிச் சிந்தித்துக் கற்
பனைக் கிரந்தங்களெழுதிவைத்துக்கொள்ளவில்லையென்பது மட்டும் நன்கு
விளங்குகின்றது.

## திராவிடரின் உண்மை நூல்களும், ஆரியரின் கற்பித நூல்களும்.

மனுஸ்மிருதி, பாரத இராமாயணாதி, இதிகாச புராணங்கள்,
ஜோதிடம், சதுர்வேதம் முதலிய நூல்கள் ஓர் விதத்தில் வஞ்சனையாகவும்,
மற்றோர் விதத்தில் ஒருதலைச்சார்பாகவும், ஆங்காங்கு ஆரிய மதத்திற்
கனுகுணமாக புனைந்துரைத்து அதனால் இதுகாறும் ஜீவித்துவரும் ஆரி
யர்களைப் போல இத்தேசத்தின் பூர்வ குடிகளாகிய திராவிடர்கள் மறந்
தும், சுயநலம் கோறி ஓர் ஜாதி சமயப் பற்றுகளை விசேஷித்துக் கூறும்
நூல்களை இயற்றாது பொதுஜன பிரயோஜனார்த்தமாகப் பாடுபட்டு நீதி
சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம், தாவரவர்க்க சாஸ்திரம்

---

னுக்கு வடமொழியில் தர்மனென்றே பெயரென்றும், இவன் மகனே
தர்மராஜனாக வந்துதித்தானென்றும், இத்தகையோனுங்கூட ஓர் சமயம்
உபயார்த்தமாய் "அசுவத்தாமா இறந்தான்" என்று பொய் சொன்னதால்
நரக வேதனையைத் தன் கண்களால் சென்று காணும்படி நேரிட்டதென்
றும் சொல்லாநின்ற அநந்த புராண வரலாறுகள் போன்றவைகள் ஆரிய
நூல்களிலே எங்கும் பார்க்கக் காணலாமேயன்றி திராவிட கிரந்தங்களில்
காணப்படாததாகும்.



முதலிய நல்ல பயனுள்ள சாஸ்திரங்களை மட்டும் விவரித்தெழுதி சுதே
சத்திற்கு நன்மை செய்துள்ளபடியால் ஆரியரினும் இத்தேசப் பூர்வ குடி
களாயுள்ள திராவிடர்களே நாகரிகமுடையவர்களென்பதற் கையமில்லை.
மத்திய காலத்திலெழுந்த பௌத்தமத முதலிய சமயங்களை ஸ்தாபித்தவர்
களும், அதை உலகெங்கும் வியாபிக்கச் செய்தவர்களும், அனுஷ்டித்தவர்
களும், இத்தேசத்தவரே யன்றி ஆரியரல்லர். ஆரியமத விரோதிகளா
கிய பௌத்தர்கள் நல்ல நூல்களும் இயற்றியுள்ளார்கள். சாக்கிய மதஸ்
தாபனராகிய கபிலரென்பவர் மதவிஷயமாய் ஒருவரோடொருவர் தர்க்கிக்
குங் காலத்தில் வாதவிஷயமாய் இரு பக்ஷங்களிலும் நேரும் ஒழுங்கின்மை
யைக் கண்டு அவற்றைச் சீர்திருத்த தர்க்க சாஸ்திரமென்னுமோர் அரிய
நூலை எழுதிவைத்தார். இவ்வருமையான சாஸ்திரத்தை வர்த்தக விஷ
யமாய் அடிக்கடி இத்தேசத்திற்கு அக்காலத்தில் வந்துகொண்டிருந்த
கிரீக் தேசத்தார் தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோயினர். அத்தேசத்
துத் தத்துவ சாஸ்திரியாராகிய அரிஸ்டாடல் என்பவர் இந்நூலைக் கற்று
ணர்ந்து தன்னுடைய சிஷ்யர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். பின்னர்
அவர்கள் மூலமாய் உலகவியாபகமாயிற்று. இம்மையின் சுகமே மோக்ஷ
மென்றும், துக்கமே நரகமென்றும், இருப்பினும் அநித்தியமான இப் பிர
பஞ்சத்தின் சுகவாழ்க்கையின் பொருட்டு ஒருவரை யொருவர் வஞ்சிபாம
லிருக்கவேண்டுமென்றும் இத்தேசவாசியாகிய அசோக மகாராஜா என்
னும் ஸ்ரீமான் நீதி சாஸ்திரத்தை முதன்முதல் நவீனமாய் எழுதிவைத்
தார். இத்தகைய நல்ல நீதிபோதங்களை பௌத்த மத காலத்தில் எங்
கும் எவர்க்கும் ஒழிக்காமல் வெளிப்படுத்தப்பட்டது. இங்ஙனமே உண்டு
உறங்கொள்வதற்கு நளமகாராஜா பாகசாஸ்திரத்தையும், உல்லாசமாய்க்
காலம் போக்க இராவணன் சங்கீத சாஸ்திரத்தையும் எழுதிவைத்ததாய்த்
தெரியவருகின்றன. ஆரியர் இங்ஙனமே முற்றும் நன்மை தரும் வழி
யில் புத்தகங்களெழுதினதாய்த் தோற்றவில்லை. அதிகமாய் சுஜாதிப்புற
றுக் காட்டியேயுள்ளார்கள். பற்பல கலைக்கியானங்களிலும், சிற்ப சித்திர
வித்தைகளிலுங்கூட திராவிடர்கள் பிற்பட்டவர்களல்ல. திருஷ்டாந்த
மாக ஆரியர் இத்தேசத்துச் சிற்பிகளைக்கொண்டு பல ஆலயங்கள் கட்டி
வைத்தார்களே யன்றி அவர்களேயாவது அவர்கள் யுக்தி புத்தியின்படியா
வது ஒன்றையுங் கட்டிவைத்ததாய்க் காணப்படவில்லை. இதுவுமன்றித்
தென் தேசத்திலிருப்பதுபோல வட தேசத்தில் பெரிய கோவில்களு
மில்லை, விசித்திரக் கட்டிடங்களுமில்லை. மேலும் அவைகள் சமீப கா
லத்திற் கட்டியவையே யன்றி திராவிட தேசத்திலிருப்பவைகளைப் போல
மிகப் புராதனமுடையதன்று. யவனர் (கிரேக்கர்) முதலியவர்கள் திரா
விட தேசத்தில் தொழிலாளிகளாய் அமர்ந்து வேலை செய்ததுவும் உண்
டெனினும், அவர்களை வேலையாட்களாய் வைத்துக்கொண்ட திராவிடரின்
புத்திவன்மையை விசேஷித்திருக்கலாமே யன்றி வேறில்லை. சிற்பம்

என்னும் பதங்கூட தமிழ்ப் பதமேயன்றி ஆரியபதமல்ல. சிற்பவல்லவர்கள் புத்திவன்மையைக் காட்டிய சட்டங்களும் இத்தேசத்திலிருக்கின்றதே யன்றி வேறிடங்களிலில்லை. ஆகையால், இத்தேசக் குடிகள் பூர்வகாலந் தொடங்கி சிற்ப சித்திரத் தொழில்களிலும், பிறவிஷயங்களிலும், நாகரிகமும் நற்பாங்குமுள்ளவரென்றும் ஜாதி சமயபேதம் பாராட்டாதவரென்றும், ஆரியர் வந்தபின்னரே சீரும் சிறப்பும் ஒருங்கே இழந்தனரென்றும் சொல்வதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் பலவுள. ஒருவர் நன்னிலையிலும், மற்றொருவர் தாழ்நிலையிலும் இருக்கவேண்டுமென்பது திராவிடரின் கருத்தாயிராது. அவர்களெழுதிய நூல்களிலொன்றிலேனும் தங்களை உயர்த்தியாவது, மற்றவர்களைத் தாழ்த்தியாவது, ஆரியமதத்தைக் கண்டித் தெழுதியாவது இல்லாமலிருப்பதே திராவிடரின் பெருமை இத்தன்மைத் தென்பதற்கோர் திருஷ்டாந்தமாகும். ரிக் முதலிய ஆரிய வேதாகமங்களிலோ திராவிடர்களைத் தாசர்களென இழிவுபடுத்தி யெழுதியிருப்பதோடுகூட அவர்கள் ஆடுமாடுகளும், செல்வமும் நாசமடைய வேண்டுமென கடவுளைப் பிரார்த்தித்திருப்பதாகவும் தெரிகின்றன. திராவிடர்கள் நூலெழுதிய காலத்தில் ஆரியர்கள் இவ்விடத்திற்கு வரவேயில்லை யாதலின் திராவிடர்கள் ஆரியதூஷணை செய்யாதிருப்பதற்குச் சிலர் சொல்லுகிறபடி இது வோர் காரணமாயிருப்பினுமிருக்கலாம். ஆரியர் இத்தேசத்திற்குக் குடியேறிய பின்னர் ஜாதி துவேஷத்தால் கற்பித் தெழுதப்பட்ட இராமாயணமென்னும் கிரந்தத்தில் இலங்கையை ஜெயித்த இராமனையும், பாரதத்தில் பிரஸ்தாபிக்கின்ற கிருஷ்ணன் முதலிய குறுநில மன்னர்களையும், சிவன், விஷ்ணு முதலிய மறவப் பெயர்களையும், வணங்கும்படியாய்க் கற்பனைக் கிரந்தங்களெழுதினார்கள். திராவிடப் பெண்கள் கைம்மையராயின் கணவன் மீதுள்ள அன்பினால் உடன்கட்டையு மேறியிருக்கலாம். இவ்வியல்பை வரவின் நிமித்தம் ஆரியர் விருத்தி செய்துகொண்டனர். இந்தப் பெண்கள் எவர்களாயினுஞ் சரி தெய்வசங்கல்பமாகக் கைம்பெண்களாயின் அதை யோர் ஆதாரமாய் வைத்து அவர்கள் தங்கள் சொத்துக்களை பிராமணர்களுக்கு தானங் கொடுத்து உடன்கட்டை யேறும்படி ஹரிதோபதேசஞ் செய்யப்பெற்றனர். * ஆரியர் போதித்தபடியே யாமாரஞ்சிதமாகவே நமது

* அவ்வுடன்கட்டையேறின சிற்சில விடங்களிற்றானே அழகிய கோயில்களைக் கட்டி இறந்த சாதாரண மானிடர்களைத் தெய்வீகமாக்கி யவரும் வணங்கவேண்டுமென்று போதித்து அவைகளால் வரும் வரும்படியைக்கொண்டு சுகமாய் ஜீவிக்கவும் ஆரம்பித்தனர். மதுரை, திருப்பதி, திருவொற்றியூர் திருவண்ணாமலை, முதலிய திவ்யஸ்தலங்கள் இங்ஙனம் உடன்கட்டை யேறின சமாதிகளாகக் கருதுகின்றனர் சிலர். ஸ்ரீ ராமர்,



கோயில்களும் பழக்கவழக்கங்களும் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்க வேண்டுமென்று மர்க்கடப்பிடியாய்ச் சாதிப்பது மதியூகிகளுக் கழகல்லவென்றே நினைக்கின்றேன். நமது கோயில்கள் நியாயமான வழியில் பலருக்கும் அநுகூலமாகவு மிருக்கவேண்டும். இப்பொழுது சுமார் பாடல்பெற்ற

ஸ்ரீ கிருஷ்ணபகவான், கஞ்சி வரதராஜர், தில்லை கோவிந்தராஜர், திருப்பதி வெங்கடாசலபதி, மதுரை சோமசுந்தர பாண்டியன், காசிவிஸ்வநாதர், திருவொற்றியூர் தியாகராயர், பழனி செங்கல்வராயர் முதலியவர்கள் ஓர் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மாநுடர்களேயன்றித் தெய்வங்களல்ல. இராஜா ராயர், பாண்டியன் முதலிய பதங்களே இதற்குப் போதிய சான்றாம். கைப்புண்ணிற்குக் கண்ணாடியேன்? பிற்காலத்தவர் இத்தகையார்கள் பேரில் சரமகவிகள்பாடி பின்னுஞ் சிறப்பித்து அவர்கள் இருந்தவிடத்திற்கு ஸ்தலபுராணங்கள் என்னுமோர் பெரும் பெயரையுண்டாக்கி இறந்துபோன மனிதர்களைக் கடவுளவதாரமென்றும், இன்னின்ன காரணங்களுக்காக அவர்கள் அவதரித்தார்களென்றும், அவர்கள் உயிரோடிருக்கும்போது மாநுடருக்கு மிஞ்சின பல அற்புதக் கிரிகைகளைச் செய்தார்களென்றும், கற்பிதக் கதைகளால் விவரித்து திராவிட தேசத்திலுள்ள பூர்வீக தத்துவ விசாரணைக்கு இடையூறுண்டாக்கினர். நாம் இங்ஙனம் ஆரியர் வருவதற்கு முன்னும் பின்னுமுள்ள பூர்வீக திராவிட சரித்திரவரலாறதைப்பற்றி எழுதும்போது இத்தேசத்திலிடையில் வந்த சைவ வைணவ சமயாபிமானிகள் திராவிட தேசத்தின் சரித்திர வுண்மையை மட்டும் கிரகிப்பது தர்மமேயன்றி வீணே என்பேரில் மதாவேசத்தால் உண்டாகும் ஓர்விதஅசூயைக்கு இடங்கொடுத்துக்கொள்வதினால் பயனொரு சிறிதுமில்லை. மாதொரு மதாவேசத்தால் தாண்டபெற்றும் மனச்சான்றுக்கு விரோதமாய் வேண்டுமென்றொன்றும் எழுதவுமில்லை. இப்பொழுதிருக்கும் கோயில்களையெல்லாம் இடித்து யாவருமே நாஸ்திகராக வேண்டுமென்பதல்ல, சாந்தச் சித்தமுடையவர்களும், தத்துவ விசாரணையுள்ளவர்களும் நமது கோவில்களைப் பலவாறு நாகரிகமுள்ள இக்காலத்திலே உபயோகப்படுத்தலாம். கோயில்களெல்லாம் சமாதியென்பது என் கருத்தல்ல, தற்காலத்திலே பஜனை மடங்களும், பிரம்மோபசன மண்டபங்களும் கட்டப்படுவதைப்போலவே சில கோயில்கள் ஈஸ்வராராதனைக் கென்றே கட்டியிருக்கலாம். யாவும் தேவாலயங்களே யெனினும் சில வற்றை நாம் சமாதியென்று எடுத்துக்காட்டுவதற்கு ஆதாரங்களுள. சிலமுறற் குறித்தவைகளுக்கு ஸ்தல புராணங்களில் ஆதாரமில்லை யென்னுமிருப்பினும் புராண கற்பனையினால் உண்மை யொருக்கால் மறைக்கப்பட்டிருப்பினும் இருக்கக்கூடும். நமது கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களைவும் இருக்கக்கூடும்.

Q2
H14
17/4486

சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டும் விஷ்ணு ஸ்தலங்கள் நூற்றெட்டுமிருக்கின்றன. இவைகளால் எவ்வெவ் வழிகளில் நமக்குப் பயனுண்டாகின்றன? இவைகளின் தற்கால உண்மைநிலை, பரிகாச ஆஸ்பதமாய் நமது அருமையான பணமும் சிறுகச் சிறுக பாழாகின்றது * ஆகையால்

---

ணவ ஸ்தலங்கள் யாவுமே சுயம்பாகவே உண்டானவைகளென்று சொல்லினுஞ் சொல்வர். ஆனால், சுயம்பாய் உண்டான கோயில்கள் என்பது மட்டும் மன யூகைக்கும் தர்க்கத்திற்கும் பொருந்தி வராது. ஆங்காங்குள்ள சைவ வைணவ ஆலயங்கள் மனிதர்களால் வருந்தி கட்டப்பட்டு அவைகளிலே கடவுளைப் பிரதிஷ்டை செய்வித்துப் பூசிப்பது இரகசியமான விஷயமல்ல. தேவ தச்சனால் கோவில்களுண்டாகி, கோபுரங்கள் மண்டபங்கள், மதில்கள், நந்தனவனங்கள் முதலிய யாவுமே சிற்பசாஸ்திரப்படி அமைந்து விடுதல் முற்றிலும் அசம்பவம்.

* நம் பணம் பாழாகிறதென்றால் எச் சைவ வைணவனுக்குத்தான் கோபமுண்டாகாதெனச் சிலர் நினைக்கக்கூடும். சினமுண்டாக்கவேண்டுமென்பது நமது கருத்தல்ல. சரித்திர விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேமேயன்றி வேறில்லை. ஆரிய மதத்தை நிலைநிறுத்த பலவித தந்திரோபாயங்கள் செய்யப்பட்டனவென்பதை ஞாபகப்படுத்துகிறேனேயன்றி வேறில்லை. ஆரியர் இங்ஙனம் என்ன முயற்சி செய்தும் பலர் பௌத்தர்களாகவே யிருந்தமையால் யாவரையும் ஆரிய மதத்திற்கிழுக்கப் பின்னும் தாந்திரீக ஆகமாதி கிரந்தங்களை விஸ்தரித்தெழுதுவாராயினர். சிவபெருமான் பார்வதி தேவியாருக்குச் சல்லாப ரூபமாய்ப் போதித்ததாய்ச் சொல்லப்பட்டிருப்பதவும், புத்தர் தமது சீடர்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்வதவும், இவைகளை அநுசரித்து சைவ வைணவ சமயத்தார் பலரும் எழுதிய புத்தகங்களும், தாந்திரீக கிரந்தங்களுக்கு நிதர்சனங்களாகும். இவற்றினுதவியினால் நம் நாட்டில் பிற்காலத்தில் விக்கிரஹாராதனையும், நித்திய நைமித்தியாதி பூஜைகளும், இரதோற்சவங்களும், வேசிகள் நடனமும், வேடிக்கை விநோதங்களு மதிகரித்தன. கோயில்களுக்கு ஆடையாபரணம், மேளதாளங்கள், மனிதர்களுக்கிருக்கிறபடியே சுவாமிகளுக்கும் மனைவி, மக்கள், படுக்கை, வாகனம் முதலிய வைபவங்களும் அதிகரித்தன. வல்லபாசாரிகளுடைய கோவிலென்னும் ஸ்தலத்தில் சுவாமிக்கு எட்டுத் தடவை பூஜை ஆவதுண்டாம். காலையில் மங்களசேவை, அதாவது இராத்திரி தூங்கின சுவாமியைப் படுக்கைவிட்டெழுப்பி ஸ்நானமும், ஆடையாபரண அலங்காரமுஞ் செய்து பின்னர் வணங்கல். அதன் பின்னர், எட்டுமணிக்குச் சிங்காரச் சேவை, அதாவது சுவாமிக்குத் தைலக்காப்பிட்டு அபிஷேகஞ் செய்வித்து, வஸ்திராபரணா



நான் கூறியவற்றைப்பற்றி ஆய்ந்து ஆலோசித்துப் பாருங்கள். சரியாயாயின் ஒப்புக்கொள்ளுங்கள். உண்மையறிய முயலுங்கள். ஓ! திராவிட சகோதரர்களே!! முற்குறித்த பௌராணிகக் கொள்கைகளை நியாயமின்றி ஏன் நம்பவேண்டுமோ தெரியவில்லையே என்று உங்களுக்கே படலாம். பழந் தமிழ்க் குடிகளெழுதிய நூல்களொன்றிலேனும் இங்ஙனம் ஏதாவது எழுதப்பட்டிருப்பதாய் ஏற்படாது. தற்சமயத்து பழக்கமே

---

தரிப்பித்துச் சிங்காசனத்தின்பேரில் வைத்துப் பின்னர் வணங்குதலாகும். மத்தியானம் சுவாமி பசுக்களை மேய்த்துக்கொண்டு இடையரோடு கூடி வனத்திற்கு மாடு மேய்க்கப்போகும் பாவனை. அதன் பின்னர் இராஜபோக சேவை, அதாவது மாடுகளை மேய்த்துக் களைத்துவந்த கிருஷ்ணனுக்குச் சகல போஜனங்களையும் வைத்துப் படைத்து வணங்குதலாகும். அதன் பின்னால் மூன்று மணிக்கு உண்ட களைப்பாற சற்றுப் படுத்துறங்கி இளைப்பாறுஞ் சேவை, இதன் பின்னர், சுவாமிக்குச் சிற்றுண்டி வைத்து பூஜித்தல், உலாத்தல் முதலிய திவ்ய சேவைகளுமுள. இவையெல்லாம் ஆனபின்னர் மாலையில் சுவாமிக்கு இராத்திரிக்கேற்ற வுடை தரித்து பூஜித்தலென்பதாகும். எட்டாவது சேவை சயனம். கிருஷ்ண விக்கிரகத்தைப் படுக்கவைத்துப் பக்கத்தில் தாம்பூலாதிகளை வைத்துப் பூஜித்தலாகும். ஆரிய உபதேச மகிமையால் நமக்கேற்பட்ட தென்னிந்திய தேவாலயங்களிலும் இத்தகைய சேவையுண்டு. நமது தென்னாட்டின் சரித்திர விவகார சேவைகளின் பெருமைகளை நான் விவரிக்காமலேயே அவரவர்களே யூகித்துக்கொள்ளுமாறு விட்டுவிடுகின்றேன். இவ்விடத்திலும் சைவ வைணவக் கோயில்களிலிருக்குஞ் சுவாமிகள் பள்ளியறைக்குச் சென்றபின் மறுநாள் அவ்வறை யெல்லாம் கம கம வென்று வாசனை வீசுதல் அற்புதம் அற்புதமென்பர். அத்தர், பன்னீர், செண்ட், புனுகு சவ்வாது பலவித புஷ்ப வகைகள் முதலியவைகளைப் போட்டிருப்பின் கம கம வென்று மணக்கக் கேட்பானேன்? இதில் தெய்வீகப் பெருமை யென்ன விருக்கின்றது? இவ்வண்ணம் கோயில்களில் தினத்திற்குப் பல பூஜைகளிருப்பதவுமன்றி, வார உற்சவம், மாத உற்சவம் வருஷோற்சவங்களும் பலவுள. நம் தேசத்தில் எங்குமே இத்தகைய வேடிக்கை விநோதங்களை அதிகரித்து வருகின்றன. சில விடங்களில் கடவுளை மனிதர்களிலும் மிக்க கேவலமாய்ப் பாவித்து வணங்கி வருகின்றனர். இன்னும் கேள்வியிலும் வதந்தியிலுமிருக்கிற விஷயங்களையெல்லாம் எடுத்து விவரிப்பின் பெருகுமென விடுகின்றேன். ஆரியரால் முற்றும் கெடுதியென்றியம்புவதற்குமில்லை. அவர்களால் எங்குமே கோவில்கள், கட்டடங்கள், கோபுரங்கள், அனைவரால் சிற்பத்தொழில் விபிவிர்த்தி

விசேஷமென்பது சரியன்று அப்படியாயின் மாநுடர் நியாயத்தைப் பின்பற்றவேண்டியதே யில்லையென்பேன். திராவிடர்கள் ஆரியர் காட்டிய வழியைப் பின்பற்றி இயற்கைக்கு விரோதமாய் எத்தனை நாள் இருப்பரோ தெரியவில்லை. கடல் யாத்திரை, இருதுமதி விவாகம், மறுமணம், உசிதமான எத்தொழிலையும் செய்தல், ஜாதிப் பிரிவுகளின்றி யிருத்தல் முதலிய திராவிட பூர்வீக வழக்கங்களையே ஆரிய பண்டிதோத்தமர்களும் சிஷ்டாசாரமே யென்று சபைகள் கூடிப்பேசி அனுஷ்டிக்கவும் போகின்றார்கள். இப்பொழுது அத்தகைய தோற்றங்களுமுள. அப்படியிருக்க நாமேன் கண்மூடிகளாயிருந்து அவர்கள் காட்டிய தகாத வழியில் இருத்தல் வேண்டும். ஆரியர் இங்ஙனம் பற்பல மாறுதலடைவதிலும் நாம்

சிற்பசாஸ்திராபிமானம், பலவித வாத்தியங்கள், அவைகளால் ஓர் விதத்திலுண்டாகும் சங்கீத ஞானம், அதன் பயிற்சி முதலியவைகள் உண்டாகியதும் ஓர் விதத்திலுண்மையே. இதற் கெதிர்மறையாக திராவிட தேசத்தில் மூட பக்தியும், சாதி சமயத் தொல்லைகளும் பிறவும் விருத்தியானதையும் நாம் ஒழிப்பதற்கில்லை. பழைய காலத்து குருநில மன்னர்களுக்குப் பிராமணோபதேசமே குருவுபதேசமாக விசேஷித்திருந்தபடியால் சொன்னதை யெல்லாம் நம்பினார்கள். இக்காலத்திலும் அங்ஙனமே நம்பவேண்டுமென்கிற நியாயமொன்றுமில்லை. பிராமணர்களைப் பூர்வீக திராவிட அரசர்களும் பிறரும் அன்போடாதரித்து வந்ததற்குப் பிரதியுபகாரமாக அவ்வரசர்கள் இறந்தபின் அவர்களைப் பிராமணர்கள் தெய்வீகமாக்கிவிட்டார்கள். இப்பொழுது ஒருவரும் நம்மை தெய்வீகமாக்கமாட்டார்கள். ஓர் அரசனிருந்தால் அவன் பிரத்தியக்ஷ தெய்வமென்று எங்கும் வதந்தி யெழுப்பி அவர்கள்பின்சந்ததியார்களைக் கொண்டு அவர்கள் பெயரால் கோவில்களைக் கட்டிவித்து அவற்றிற்குவேண்டிய மானியங்களையும் விடச்செய்து அவைகளின் வரும்படியைத் தாங்களனுபவித்து தங்கள் பின் சந்ததியாரையும் அனுபவிக்கச்செய்து இறந்த ராஜனாகிய கடவுளுக்கு அவரவர் சரித்திர விவகாரங்களையொட்டி யாம் முன்னமே கூறியவண்ணம் விவாகமென்றும், சுபசோபனங்களென்றும், பள்ளியறைக்குச் செல்லுதலென்றும், காலை மாலை போஜனமென்றும், நகர் சோதனைக்கு வருகிறாரென்றும், உற்சவ ஊர்கோலங்களென்றும், அர்ச்சனை அபிஷேகங்களென்றும், சுவாமி தரிசனமென்றும், தரிசனஞ் செய்துகொள்ள இவ்வளவு பொருள் காணிக்கை கொடுக்கவேண்டுமென்றும், நித்திய நைமித்தியாதி பூஜைகளாகிய இன்னின்ன கிரியைகளுக்கு இன்னின்ன பதார்த்தங்கள் வேண்டுமென்றும் விதிவிலக்குகள் ஏற்படுத்தி பொருளைக் கிரகிப்பாராயினர்.



சந்தோஷங்கொள்ளவேண்டும். ஆரியரது இம் மாறுதல்களினால் திராவிடரும் ஆரியரும், ஆசார அனுஷ்டானங்களிலும், தொழில்களிலும், சமத்துவமேற்பட்டு நம் தேசத்திலெங்குமே ஜாதி சமய பேதமின்றி ஒரு தாய் வயிற்றிற் பிறந்த மக்களைப்போல ஒற்றுமைப்பட்டு வாழ்வதற்கேதுவுண்டாகும். இப்பொழுதிருக்கிற நமது ஞானமெல்லாம் உண்மையில் பழக்கத்தில் ஒடுங்கி யிருக்கிறதேயன்றி வேறில்லை. சிலசமயம் நம்கொள்கை சிறுவர் விளையாட்டை ஒத்திருக்கின்றது. நாம் செய்யும் விவாகங்கள் தானதருமங்கள் வைதீக ஆசாரங்கள் யாவுமே விநோதத்தை விளைவிக்கின்றன. பிறப் பிறப்பில்லாதவனுக்குக் கிருஷ்ணஜயந்தி, ஸ்ரீராம நவமி என்று பல பிறப்புற்சவங்களும், ஊரும் பேரும் தாயுந் தந்தையும் இல்லாதவனுக்கு வருடந்தோறுந் தவறாது சீதா கல்யாணம், பார்வதி கல்யாணம், ருக்மணி கல்யாணம் என்று பல விவாக மகோற்சவங்களுஞ் செய்து அதற்கேற்றபடியே அவ்வப்போது பிராமண சன்மானமும் நடத்தி இங்ஙனம் பல விநோத வழிகளில் பொருளைப் போக்கி திராவிட தேசத்தின் பூர்வீக நாகரிகத்திற்குப் பிற்பட்டே போய்க்கொண்டிருக்கின்றார்கள். இதுவுமன்றி, நம்மில் கற்றவர்களி லனேகர் ஆரியர்கள் யாவருமே சத்தியவந்தர்களென்று பிற்காலத்தில் நம்பி வைதீக வேடதாரிகளாய் ஸ்தல புராணங்களிலே பொழுதைப்போக்கி, அந்தாதி, கோவை, கலம்பகம், மாலை முதலிய பிரபந்தங்களைப் பாடி அவற்றில் அநீதிகளையுங்கலந்துரைத்து ஒருவரையொருவர் இகழ்ந்து, தேசப் பொதுநன்மைக் குழைக்கும் நல்லுணர்ச்சியை யிழந்துபோனார்கள். பழையபடி நீதிசாஸ்திரங்களிலும், தத்துவசாஸ்திரங்களிலும் திராவிடர்களெப்போது காலங்கழிப்பாரோ அறியேன். திராவிடர்களுக்கும் ஆரிய வேதாகமங்களுக்கும் யாதொரு சம்பந்தமில்லை, தமிழர்க்கு வேதமென்பதொன்றில்லை. திராவிடர்கள் எத்தகைய இலக்கணமுடைய வஸ்துவை முதலில் கடவுளென வணங்கி வந்தனர்? அவர்களது பூர்வீக உண்மைச் சரித்திர வரலாறென்ன? இகபர சம்பந்தமாய் அவர்களெழுதிய எதார்த்த நீதி நூல்களெவை? என்று இவைகளைத் தீர விசாரித்து எது உண்மையோ அதையன்றோ பின்பற்றுவது உசிதமாகும். "திராவிடரின் உண்மை நூல்களும், ஆரியரின் கற்பித நூல்களும்" என்னுமோர் மகுடமிட்டு எழுதினதைப் பார்த்து, சிலர் சீற்றங்கொள்ளினும் கொள்ளக்கூடும். குற்றமே சொல்லப்படாதென்பது சிலர் கொள்கையாயிருக்கின்றது. ஆனால், எனது கொள்கை அதுவன்று. குணத்தைக் கொண்டாடுதலும், குற்றத்தைக் கடிந்துகொள்ளுதலும் என்னியல்பாகும். குற்றத்தைச் சொல்லாவிட்டால் பின்னர் திருந்துவதெப்படி? இவ்வத்தியாயம் ஆரிய மதாபிமானமுள்ள சிலருக்கு வெறுப்பாயிருப்பினும் சமநிலைச் சித்தமுள்ளாரெவர்க்குமே வெறுப்பின்றி விருப்பமாயிருக்குமென்று நம்பி எழுதியிருக்கின்றேன். நானெழுதுவ

தெல்லாம் நியாயமேயெனினும் ஜனங்கள் பலர் அநுசரிக்குங் கொள்கைக்கு விரோதமாய் ஒன்றும் எழுதப்படாதென்பாருமுளர். இக்கொள்கை சரியானதென்று எனக்குத் தோற்றவில்லை.

---

## திராவிட மதத்தின் மேன்மையும், தற்காலத்திற்கேற்ற சன்மார்க்கோபதேசமும்.

---

பூர்வீக திராவிட சமயத்தைப் பற்றிச் சுருக்கிக் கூறுமிடத்து தற்சமயத்தில் பரவிவரும் பிரமசமாஜ கொள்கைக்கு ஒருவாறு ஒப்பிட்டுச் சொல்லலாம். ஆரியரின் உண்மையான சமயம் பிரம்ம சமயமாயிருக்கலாமென்று வங்கநாட்டிலும் பிறவிடங்களிலும் பலர் சொல்வதைப்போலவே பூர்வீக திராவிடர்களின் கிரந்தங்களின்படி அவர்கள் கொள்கையும் எதார்த்த சுவரூபத்தில் இருக்கலாமென்று நினைக்கின்றோம். சிலர் அல்லவென்று ஆக்ஷேபித்துச் சொல்லவுங்கூடும். எங்ஙனமாயினுமாகுக. எம்மதமும் நாகரிகப்படுவதற்கேற்றபடி வெளியாடம்பரம் அதிகமாகி எப்படியோ ஓர் விதத்தில் முன்னுக்குப் பின் விரோதமாய் வித்தியாசப்பட்டுவிடுகின்றது. திருஷ்டாந்தமாக ஆரிய மதமே பற்பல விதமாக வித்தியாசப்பட்டுள்ளன. ஓர் விதத்தில் மூடபக்திக்குரிய அர்ச்சை முதலிய வேடிக்கை விநோதங்களும், மற்றோர்விதத்தில் ஞானமார்க்கத்திற்குரிய வேதாந்த உபநிஷத்துகளும், இன்னுமோர் வழியில் தத்தவ சாஸ்திர விசாரணைகளும், மற்றுமோர் வழியில் மத விஷயத்தில் மனித னிஷ்டப்படி யிருப்பதற்கு இடந்தருகின்ற சுதந்தரமும், காலங்கள் தோறும் அடைந்த பற்பல மாறுதல்களும், ஆரியமதத்திலிருப்பது எவரறியார்கள்; இதனால் நீதியும், நன்னெறியும், தெய்வ பக்தியும், சிறந்திருந்தும், மத்தியில் வந்த ஆரியமத ஆடம்பரங்களினால் உண்மை மூடப்பெற்ற பூர்வீக திராவிட மதத்தை விவேகிகள் வெறுத்துவிடுவது சரியல்லவே. எம்மதமாயினுஞ் சரி உண்மைக்கும், ஜன ஒற்றுமைக்கும் பொருந்தியதாயிருத்தல்வேண்டும். சரித்திரத்தை அனுசரித்துப்பேசின் இத்தென்னிந்தியாவும் மதவிஷயத்தில் பற்பல மாறுதல்கள் அடைந்துள்ளன. முதலில் உண்மைக்காதாரமான திராவிட மதமும் அதன்பின் பௌத்த ஜைனமதங்களும், அவைகள் ஒருவாறு ஓங்கி ஒடுங்கியபின் சைவத் திரு



முறைகளும், வைணவத் திருமொழிகளும், ஓங்கி வளர்ந்த பின்னர் கொஞ்சக்காலத்திற்குள் வேதாந்த விசாரணைகளும், பின்னர் சித்தாந்த ஏற்பாடுகளும் ஏற்பட்டு பூர்வீக திராவிட மதம் மறந்தே போய்விட்டது. இத்தனை மாறுபாடுகளுக்கும் இத்தமிழகமே ஜென்ம பூமியாயிருந்து வருவதின் சரித்திர வரலாற்றுக்கு நாம் சந்தோஷிக்கவேண்டும். தென்னிந்திய மத சரித்திரத்தை விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன். சரித்திரத்தில் பிற்போக்கடைந்திருக்கும் மதங்களே நமக்கிப்பொழுது பெரிதாயிருக்கின்றது. நியாயமிருப்பின் அங்கீகரிக்கவேண்டியதேயாகும். இன்றேல்; சரித்திரத்தின்படி உண்மைக்கு உடன்பாடான இயற்கை மதமாகிய திராவிட மதத்திற்குத் திரும்பவேண்டியது நியாயமென்றே தோன்றுகின்றது. திராவிட மதத்திலே யாவும் நீதிபோதனைகளாகவே யிருக்கின்றன. அம்மதத்தில் வெளிவேஷ ஆடம்பரங்களொன்றுமில்லை. எதார்த்த ஸ்வரூபமானது அம்மத போதனையின்படி நீதிநூற்களே நமது குரு. அந்நீதிநூற் போதனைகளே நாம் கொள்ளவேண்டிய குருவுபதேசம். தத்தவ சாஸ்திரங்களே நாம் பாராயணம் பண்ணத்தக்க வேதம். கல்வியே நாம் எந்நாளும் பழகவேண்டிய சாதனை. நன்மை புரிதலே நமது மதம். நன்மையாளர் வசிக்குமிடங்களே நாம் செல்லத்தக்க ஆலயம். நன்மையே நாம் தொழும் தெய்வம். நன்மைசெய்து உலக மூவக்கப் பேரெடுத்தலே நாம் அடையத்தக்க முத்தி; இவை எல்லா மதத்திற்கும் பொதுவிதியெனச் சிலர் சொல்லினும் இப்பொழுது வேரூன்றிவிட்ட ஆரிய மதத்திலே அல்லது ஆரிய மத அவலம்பிகளாகிய மதாபிமானிகளிடத்திலே இக்கருத்து வெளிப்படையாக விருப்பதில்லை மநுக்குலத்தவர் யாவரும் ஒன்றென்றும், சுவாமியைத் தொழுதற்குச் சகலருக்கும் சுதந்தரமுண்டென்றும் ஆரியர் பகிரங்கப்படுத்தவில்லை. இதுவுமன்றி ஆரிய ஜாதியார் சுயநலங்கோரி மத விஷயத்தில் எழுதினதெல்லாம் மற்றச் சாதியாருக்குச் சட்டதிட்டமாய் மாறின. திராவிட கிரந்தங்களோ அங்ஙன மெழுதவுமில்லை. விலக்கி வைக்கவுமில்லை. இவ்விஷயம் சாதாரண ஜனங்களுக்குத் தெரியாமையினாலேயே பிற்காலத்தில் தமிழ்நாட்டிலும் மலையாளக் கரையிலும், ஆந்திர தேசத்திலும் ஆரிய மத ஆதரணையின்மையால் நம்மிற் பலர் மகமதியராகவும், கிறிஸ்துவராகவும், வேறு பல மதஸ்தர்களாகவும் மாறினர். இருப்பினும், அங்கங்கே அவர்கள் இன்னும் தங்கள் பூர்வீக பாஷைகளையே பேசி இந்து நடையுடை பாவனைகளை அனுசரித்தும் வருகின்றனர். அந்தோ! ஓர் ஜனசமூகம் இங்ஙனம் சின்னபின்னமாகச் சிதறுண்டுபோனதை நினைத்தால் வயிறு பற்றி யெரிகின்றது. நாகரிகப்பட்ட இக்காலத்திலுங்கூட ஆரியமதம் சிதறிப்போனவர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. இந்தியாவில் ஓர் ஜாதியா, ஓர் மதமா, என்று எவரும் இகழும்படி இடம்பெற்றோம்.

இஃது எவருடைய குற்றமென்றியம்புவதோ தெரியவில்லை. இருப்பி
னும் நமது ஒற்றுமைக்கு வேர்ப்புழுவாயிருப்பது நாம் பெருமை பேசிக்
கொள்ளுகின்ற ஆரியமதத்தின் சில கோட்பாடுகளென்பதற்கையமில்லை.
இருப்பினும், ஆரியமதம் ஓர் விதத்தில் சித்த சமாதானத்தோடு பார்ப்ப
வருக்கு நிர்ப்பந்த நிபந்தனைகளோடு கூடியதுமன்று. சமரசபாவமாய்
நடப்பவர்தானில்லை. அவரவர் கல்வி கேள்விகளுக்கேற்றபடி ஆரியமதத்
தையும் திருத்திக்கொள்ளலாம். இதுவுமன்றி ஆங்கிலேய துரைத்தனத்
தில் மத விஷயத்திலும் ஜனசாரச் சீர்திருத்தத்திலும் காலானுகூலமா
கத் திருத்திக்கொள்வதற்கு நமக்குப் பூரண சுதந்தரமுளது. இப்படி
யிருக்க தேசகால வருத்தமானங்களுக் கேற்றபடி நம்மதத்தையும் ஏன்
திருத்திக்கொள்ளப்படாது. மாறுபடாத தேசமொன்றுண்டா? மதமொன்
றுண்டா? இந்தியாவிற்குள் நம் தென்னாடும் பிற நாடுகளும் எவ்வழியில்
மாறுபடாமலிருக்கின்றன. இக்காலத்தில் தக்க நியாயாதாரத்தின்பேரில்
ஓர் மதமிருப்பின் அதை ஒருவரும் அனாதரவு செய்யவும் மாட்டார்கள்.
யதார்த்த சுவரூபமாயிருக்கின்ற திராவிட மதத்தைப் பிரசங்கப்படுத்து
வோமாயின் நம்மைவிட்டுப் பிரிந்த மகமதியர்களும், கிறிஸ்தவர்களும் பிற
ரும் யாதொரு ஆடங்கமுமன்றி பூர்வீக திராவிட மதத்தின் மேன்மையை
நோக்கி மறுபடியும் வந்து சேரவும் மனமிசைவார்கள். ஆரியமதாபிமானி
களும் பூர்வீக திராவிட மதக்கொள்கைகளே எங்கள் மத இரகசியார்த்த
மென்று சொல்வார்களாயின் சந்தோஷமாய் நாமும் ஏற்றுக்கொள்ளவேண்
டும். அதற்கெதிர்மறையாய் வேறுவழியில் வர்ணாசிரம தர்மங்களை இன்
னும் ஆதரித்துப் பேசி சுயநலங்கோரி ஓர் தேச சமூகத்தினர்க்குள் ஓர்
வகுப்பினருக்கு மட்டும் ஏற்றத்தைக் கற்பிக்கும் பொய்க்கதைகளை யெ
ழுதி தேசத்தின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டதிற் பிழையொன்று
மில்லை. அதை மறைத்து இன்னுஞ் சுயநலப்பேற்றை விரும்பின் நாம்
அவர்களோடு சேர்ந்து பயனில்லை. சர்வசமய சமரசபோதனை குறைவு
பட்டதற்கு ஆரியரின் தன்னலமே காரணமன்றி வேறில்லை. ஒவ்வொரு
மதாசாரியரின் காலத்திலும் சமரசபோதனையின்றி வாதப்பிரதிவாதங்
களும், கலகங்களும் சண்டைகளும் நடந்தேறியுள்ளன. வீண் கட்சி பே
தமும், மதக்கலகமும், நம் நாட்டில் இல்லாத காலமுமில்லை. இதற்குச்
சங்கரவிஜயம் முதலிய சரித்திரப் புத்தகங்களும் சான்று பகரும். சமய
மென்னும் சாந்தமான பெயரை வைத்து சைவ வைணவ சமயாசாரிகளா
கிய சம்பந்தமூர்த்தி சுவாமிகள், சங்கராச்சாரியார், இராமாநுஜர் முதலிய
பிராமணோத்தமர்களுங்கூடச் சிலசமயங்களில் மாநுடர்களுக்கு இயற்கை
யாயுள்ள கருணையென்பதையும் விற்றுவிட்டு, சமணர் முதலியவர்களைக்
கழுவேற்றிச் சொல்லொண்ணாத சித்திரவதையும் செய்துள்ளார்கள். சம
ணர் செய்யும் அடாச் செய்கைகளுக்காக சைவ வைணவர்கள் தண்டித்தன



ரென்றும், துஷ்டரைத் தண்டிப்பதினால் தோஷமில்லையென்றும், தற்ச
மயத்தில் அநுசரிக்கும் சமயாபிமானத்தால் தூண்டப்பெற்றாராயினும்
பதிற் சொல்லினும் சொல்லக்கூடும். சமணர்கள், சைவ வைணவர்களுக்
குச் செய்த கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டாலன்றோ, துன்மார்க்க
சமணர்களிலும் சைவ வைணவர்கள் சாந்தஸ்வரூப சமயஸ்தர்களாவார்கள்.
அங்ஙனமொன்றுங் காணேம். ஒன்றிற் கிரண்டாய் பழிவாங்கியேயுள்
ளார்கள். இவ் வண்டப் பரப்பிலுள்ள சகல மதங்களுக்கும் நீதியைக் கற்
பிக்க ஆதாரபூதமாயிருந்த பௌத்த மதம் இவர்கள் சொல்லும் வண்ணம்
விபரீத அக்கிரமஞ்செய்ததென்பது எனக்கோர் விதத்தில் ஆச்சரியத்தை
யே தருகின்றது. ஆரிய மத போதனை எவ்வளவோ உக்கிரகத்தோடு
விரைந்தோங்கியதென்பதற்கு இக்கொடுமைகளே ஓர் சாக்ஷியாயினு மாக
லாம். பௌத்த மத நீதியும் அவர்கள் ஆரிய மதஸ்தரிடம் பட்ட கஷ்ட
மும் விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன். ஆயிரமேன்? பெருங்காய
மிட்ட குடுக்கையில் வாசனை போகாதென்பதுபோல இப்பொழுதும் நம்
தேசத்தில் ஜனங்களுக்கு மத விஷயத்தில் மட்டும் ஒற்றுமை யென்பது
கிடையாது. இதற்கெல்லாம் மூலாதாரங்களென்ன? சமயச் சண்டையில்
எப்பொழுதும் பிரீதிகொண்டேயிருக்கிறார்கள். இப்படியிருக்க பௌத்த
மத காலத்தில் ஒற்றுமையில்லாமலிருக்கக் கேட்பானேன்? ஏகேஸ்வரனை
சகலருங் கூடி ஆராதிக்கப் புதுவழியிலிறங்கி அதற்கு வேண்டிய ஆசாரங்
காட்டுவதைப் பார்த்துப் பொறாது சிலர் கோபாவேசங்கொள்ளலாம். ஆரிய
மதம் பல வழியிலும் செல்வாக்குப் பெற்ற பழைய ராஜாங்க காலமாயின்
என் கதி யாதாகுமோ நான் சொல்லக்கூடவில்லை. அவரவர் அபிப்பிரா
யத்தை வெளியிடுவதற்கு போதிய சுதந்தரமிருக்கும் இக்காலத்தில் தான்
நாம் முற்படவேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் சாந்தசமயஸ்தர்க
ளென்று வாயாற் சொல்லினும் செய்கைகளிலும் மதசம்பந்தமான நடை
யுடை பாவனைகளிலும் இன்னும் அங்ஙனமோர் ஆதாரமேற்படவில்லை.
இக்காலத்திலும் சைவருக்கும் வைணவருக்கும் ஜன்மப் பகையாக விருக்
கின்றது. வைணவத்தின் உட்பிரிவாகிய வடகலையாருக்கும் தென்கலை
யாருக்கும் என்னேரமும் மடிபிடி சண்டையாகவேயிருந்து நீதி ஸ்தல
விசாரணையில் மகிமைப் பெற்ற மறைவான மந்தரங்களும் வெளியாய்
விடுகின்றன. மாயாவாதிக்கும், அத்வைதிக்கும் தினமும் வழக்கிருந்து
கொண்டேயிருக்கின்றது. அத்வைத, துவைத, விசிஷ்டாத்வைத மதங்
களுக்கு எவ்வித ஒற்றுமையென்பதுவுமில்லை. இருப்பினும் இம்மூன்று
பெரும் பிரிவுகளும் ஒரே மதமாகிய ஆரிய மதமென்று சொல்லிக்கொள்
வர். ஒன்றேயாயின் ஒன்றையொன்று எதிர்த்து வாதப்பிரதிவாதங்கள்
செய்துகொண்டிருப்பதற்குக் காரணந் தெரியவில்லை. எண்ணிறந்த பே
தமுள்ள ஆரியமதக் கொள்கைகளுக்குள் எவர் கொள்கை உண்மை யாவர்

கொள்கை பொய் யென்பதற்கு இக்காலத்திலே தெய்வ சாக்ஷி யொன்றுமில்லை. இருப்பினும் ஓர் தீர்மானத்திற்காவது வரலாம். அதுவுமில்லை அறியாத விஷயங்களுக்கு என் சண்டையிடுகின்றார்களோ தெரியவில்லை. மதமென்னும் மாய்கை மட்டும் இந்தியாவில் அரு வழக்காக வன்றோ எப்பொழுதுமிருக்கின்றது. "தவறிவிழுந்த குழந்தைக்கு அறுவாய்மனைதுணை செய்" வதுபோல சில கபட வேஷதாரிகள் இந்தியாவில் இத்தகைய மதச் சண்டைகளும், மூட பக்தியும் எப்பொழுதுமிருக்கவேண்டுமென்றும், மதச் சண்டை யில்லாத தேசமே இல்லையென்றும், சண்டைசச்சரவின்றேல், மதத்திலுள்ள உண்மைப் பொருள் வெளிப்படாதென்றும், சமயானுகுணமாய்ப் பேசி வருகின்றார்கள். சிலரோ தாம் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதிப்பதுபோல எவரென்ன சொல்லினும் தாங்கள் பிறந்த மதமே மதம்; அதுவே சதம்; அதுவே சிரேஷ்டம்; அதுவே சத்தியம்; அதற்கு ஒப்பொன்றிவ்வுலகத்திலே யில்லை யென்று சாதிக்கவும் வாதிக்கவுங் கூடும். என்ன கால வித்தியாசமிது. ஆ! ஆ!! இம்மத மெல்லாம் முளைக்காத ஆதி நாளில் திராவிடர்கள் ஏகேஸ்வரனை ஆராதிக்கும் ஒரே மதஸ்தராகவும், ஒரே பாஷை பேசுவோராகவும், ஒரே ஜாதியினராகவும், ஒற்றுமைப்பட்டிருந்திருக்க வேண்டுமென்பது பொய்யோ. இடையில் முளைத்தெழுந்த ஆரிய மத மயக்கில் வீழ்ந்து பல தெய்வாராதனையிலும், சாதி சமயச் சண்டைகளிலும், வீண் தர்க்கங்களிலும், பொழுதுபோக்கி ஜாதி நூல்களைச் சிருஷ்டித்துப் பெருகிப் பெருஞ் சண்டையிட்டு தாழ்நிலைமையுற்றது எப்பொழுதும் தகுதியானது என்று சாதிப்பது உசிதமாய்க் காணப்படவில்லையே. இனிமேலாவது இத்திராவிட தேசத்திலே பரிசுத்த ஆஸ்திக மதத்திலும், நன்முயற்சிகளிலும், முற்போக்குடைய ஜனங்கள் விழித்தெழுதல்வேண்டும். இம்முயற்சியிலே நாம் ஆரியரை வேறு பிரிக்கவுமில்லை. அவர்கள் நம்மைப் பிரிக்கிறார்களேயன்றி வேறில்லையே இனிமேல் நாம் பிரிவுபடக்கூடாது. தற்காலத்திய மதமே மதம். அதுவே சதமென்றிருக்கும் திராவிடர்களுக்குச் சரித்திர வரலாற்றை என்னாலியன்றமட்டும் ஆதியோடந்தமாய்ச் சொல்லி திராவிடர்களுக்குள் ஓர்விதப் புது ஒற்றுமையைக் கிளப்பி அதைப் பலப்படுத்தப் பார்க்கிறேனே யன்றி ஓர் வகுப்பினர் பேரில் மட்டும் துவேஷங்காட்டி அன்னோரை ஒதுக்க முயன்றேனில்லை. இதுவுமன்றித் திராவிடர்களுக்குப் பூர்வத்தில் ஜாதிபேதமில்லையாதலாலும், நாமும் அதையே வற்புறுத்திக் காட்டுவதாலும், யாவரும் ஓர் ஜாதியாய்த் திரண்டு பழையபடி ஒற்றுமைப் படுதலே நமது நன்னோக்கம் என்பது எவருக்குமே கரதலாமலகமாகும். ஆதலால் நாம் பிரித்துவைப்பினும் திராவிட மதம் பிரித்துவைக்காதென்பது திண்ணம். மதமென்பது அபிப்பிராய பேதமேயன்றி வேறில்லை. ஓர் ஊருக்கு ஓர் வழியல்ல பல வழியாகும்.



"தலைபலவாய்ப் பெயர்பலவாய் நதிக ளெல்லாஞ்
சாகரத்தி லொருநீராந் தன்மை போலப்
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டதொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்"

என்றபடி சர்வ சமய சமரசக் கொள்கையை அநுசரித்து ஒருவரையொருவர் விரோதிக்காதிருக்க வேண்டுமென்பது எனது கொள்கை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

"எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட் கருணைசெய்யாய் பராபரமே."

என்று தாயுமான சுவாமிகள் சொன்னபடி தன்னைப்போல பிறரை நேசிக்கவேண்டும். கண்மூடிய காலத்திலிருந்தபடியே இக்காலத்திலும் ஜனங்கள் பிராமணர்களைப் பிரத்தியக்ஷ தெய்வங்களென்று நினைத்து வணங்கவேண்டுமென்று நினைப்பது சரியல்லவே. சிருஷ்டியில் யாவரும் சமமென்று வாதிடவேண்டும். நம்மை அவர்கள் சூத்திரரென்று ஒதுக்கப்பார்க்கினும் நாமும் அவர்களும் ஒன்றென்றும், ஓர் தாய்மக்களென்றும் உள்ளன்போடு நேசிக்கவேண்டும்.

---

## முடிவுரை.

---

சுருக்கிக்கூறுமிடத்து, தற்பெருமையும் சுயநலமும் விட்டு வெறுப்பதே நம்மதம். யாவரையும் ஒன்றுபோல நேசிப்பதே நம்மதம். சர்வ தேச சகோதரத்வம் காட்டுவதே நம்மதம். அதுவே நம்மத விருதுக்கொடி. நல்லொழுக்கமே இம்மதத்தின் பிரதான தர்மம். உத்தம ஒழுக்கமுள்ள இம்மதத்திற்கு மற்ற மதத்தினர் எப்பெயரிட்டழைப்பினும் பொருந்தும். வேதாந்தமென்பதும், சித்தாந்தமென்பதும், சைவவைணவ சமயங்களென்பதும் உத்தம ஒழுக்கத்தைப் பின்பற்றியதன்றோ? பாசிபடர்ந்த வாரியில் நீர் கண்ணிற் காணப்படாததுபோல வெளியாடம்பரங்கள் அதிகமாயுள்ள சமயங்களில் உண்மைப்பொருள் மறைவுபடுகின்றது. இவ்வழியைப் பின்பற்றிப் பார்ப்பின் திராவிட மதமே ஒவ்வொரு மதத்திற்கும் மூலாதார

மாய் நிற்கும். மனச் சாக்ஷிக்குச் சிறிதும் விரோதமின்றி எதார்த்தமாய் நடக்கும் மார்க்கமெதுவோ அதுவே திராவிட வேதமார்க்கம். இம்மார்க்கமே மானிட வியற்கைக்குப் பொருந்தியதென்பதிற் சந்தேகமில்லை. இப்பரிசுத்த நிலையிலிருந்து எக்காரணத்தாலும் வழுவாதிருப்பது நமது வைதீகம். திராவிட சமயமெனினும், உத்தம ஒழுக்கமெனினும், நன்மாறு வதீக இலக்கணமெனினும் ஒன்றேயென்று துணிதல் வேண்டும். நல்லொழுக்கமின்றேல் ஓர் சமயத்தினால் யாது பயன்? ஒழுக்கமே இகபரமிரண்டிற்கும் பெருஞ்சாதகம். நமது மதத்தின் முக்கிய கருத்தெல்லாம் இந்த ஜன்மத்தில் நம்மாலியன்றமட்டும் நன்மைசெய்வதும் தீமையையொழிப்பதுமாக விருக்கவேண்டும். "கோட்டைக்குள்ளேயே சுத்தும் பழியும்" என்பதுபோல சுதேசத்திற்றானே பரஸ்பர விரோதமான கொள்கைகளும், நடையுடை பாவனைகளும் ஒற்றுமைக்கு வேர்ப்புழுப்போன்ற ஜாதியாசாரங்களும் நெடுநாளாய் இந்நாட்டில் வழங்கிவர ஆரம்பித்துவிட்டபடியால் இப்பொழுது ஓர் மதத்திலிருக்கவேண்டிய இன்றியமையாத உண்மையைச் சொல்லினும் கேட்பாரிலர். "கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது" என்பது போல நாம் நன்னோக்கமாய் ஒற்றுமைக்குற்ற வழியைச்சொன்னால் அதற்கு எதிர்மறையாக தூஷணமொழிகளுங் கிளம்புகின்றன. மதப்பற்றுள்ள யாவருமே பாகியசின்னங்களோடிருந்தால் சித்திபெறலாமென்று நினைத்திருக்கிறார்களென்பதற்கையமில்லை. இந்நினைப்பிற்கேற்றபடி பகல் வேஷக்காரர்களும் அதிகரிக்கின்றனர். சித்த சுத்தியில்லாத இத்தகைய வெளிவேஷத்தால் பயனில்லையெனில் நம்பேரில் சீறிச்சினங்கொண்டு பின்னும் அதிகமாய் மதவைராக்கியங்காட்டி நம்மை வெறுக்கத் தலைப்படுகின்றனர். வைஷ்ணவர்கள் துவாதச நாமங்களைப் பூண்டு சங்கு சக்கரங்களைத்தரித்து விரதங்களை அனுஷ்டித்து ஒருவரும் தொடப்படாதென ஒதுங்கியிருப்பதினாலும், சைவர்கள் திருநீறு உருத்திராக்ஷங்களைத்தரித்து சிவநேசச் செல்வரெனச் செருக்குக்கொள்வதினாலும் பேதைகள் வியக்கக்கூடிய புராணசிரவணத்தினாலும் முத்தி அடைந்துவிடலாமென்று நினைத்திருக்கின்றனர். இவற்றிற்கேற்றபடி மூட பக்திக்குரிய ஒழுக்கமில்லாதார் போலிப்பிரசங்கங்களும் ஆங்காங்கு வெளியாகின்றன. காலமும் இன்னும் பழையபடியே விபரீதமாகவே யிருக்கின்றது. கடவுளின் ஸ்வரூப சின்னங்களைப்பற்றியும் அவருடைய திருவிளையாட்டைப்பற்றியும் மனதிற்குப் பலவித நிர்ப்பந்தங்களுண்டாக்கிப் பரஸ்பர விரோதமாய்ப்பேசி புராணங்களைக் கற்பித்து பிராமணர்களாகிய மாணிக்கவாசகர், சம்பந்தர், இராமநுஜர் முதலியவர்களையும், அந்நிய சமயாசாரிகளாகிய, கிறிஸ்து, முகம்மது, முதலிய சமயாசாரிகளையும் நம்பி மேன்மேலும் மாநாட ஜபங்களைச்செய்து இம்மதஸ்தரின் தாட்சண்யத்திற்குக் கடவுள் கட்டுப்படுவாரென நினைத்து சமயச்சண்டைகளிலே வாணாளை



முழுதும் வீணாய்ப்போக்கிப் பிறந்த தேசத்திலேயே பற்பல பிறிவுபட்டுப்போனோம். எம்மதமாயினுஞ் சரி ஓர் மதத்திற்கு உத்தம ஒழுக்கமே பிரதானமெனில் இவ்வளவு பெரும் பேதங்களேற்படாதே. அந்தோ! இப்பெரும் பிரிவுகளைப் பார்க்குந்தோறும் நம் மனம் புண்படுகின்றதே. இனிமேலாவது திராவிடர்கள் வேறு எம்மதத்திற்கும் போகவேண்டுவதில்லை. ஆரிய மதமே சர்வ சிரேஷ்டமென்று நம்பவேண்டுவதுமில்லை. ஏனெனில், திராவிட மதமே சகல மதத்திற்கும் அடிப்படையாயிருக்கின்றது. நாம் மேற் சித்திரங்களைக்கண்டு மயங்கப்படாது. சைவ வைணவ சமயங்கள், அவற்றின் பற்பல பிரிவுகள் பிரம சமாஜம், பிரம்ம ஞான சங்கம், ஆரிய சமாஜம், இராம கிருஷ்ணமிஷின், முதலியவைகளும், ஏனைய கிறிஸ்து மகம்மதாதி மதங்களும், நீதி போதகத்தையும், உத்தம ஒழுக்கத்தையும், இழந்துபோயின் வேறு விஷயங்களால் பெருமையென்னே. ஆதலின், திராவிட சகோதர சகோதரிகளே. திராவிட கிரந்தங்களிலே மலிந்தும் புதை பொருளாகவும் காணப்படும் பரிசுத்த ஆஸ்திக மதமென்னும் நீதிபோதக சமயத்தை யாவருக்கும் பயன்படும்படி வெளியாக்கி பகிரங்கப்படுத்த முன் வாருங்கள். இப்பெரும் பிரயத்தினமே தற்காலத்தில் ஒப்புயர்வற்ற பேருபகாரச் செய்கையாகும், இதனால், பல இகபர நன்மைகள் நம் தமிழகத்திற்கு முண்டாகலாம். முயன்றால் இம்முயற்சி வீண்போகாது. இம்மதமே மாநுடர் தன்மைக்குரிய பொதுமார்க்கமென்று அறியத்தக்கது.

ஆரிய மதமோ மநுஷ்ஜாதியினரை வேறு வேருகப் பிரிக்கும். திராவிட மதமோ ஒன்றுசேர்க்குமென்பது திண்ணம். இம்மதத்தின் பரிசுத்த அன்பாகிய நீரோட்டம் மனுக்குலமெங்குஞ் சென்று பாயுந்தன்மையுடையது. ஆரிய மதத்தின் அன்புநீர்ப்பெருக்கிற்குச் சுயநலப்பேற்றினால் அவ்வப்போது தடைப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆதலால் இச்சமயம் இகலோக சமாதான ராச்சியம் என்பதற்கையமில்லை. ஆரியமதம் சதா சண்டைசெய்கின்ற போர்க்களத்தை ஒத்திருக்கின்றது. இம் மதத்தின் சர்வ வியாபக அன்போ எங்கும் தங்கு தடையின்றிச் சென்று எல்லா மனிதர்களையும் கடவுளுக்குச் சம்பந்தப்படுத்திவிடும். என்பதற்கையமில்லை. சமயபேதம் தெய்வ பக்திக்கு முற்றிலும் விரோதம். உலகமே நமது வீடு; மநுக்குலமே நமது குடும்பம்; கடவுளே நமது தந்தை; யாவரும் நமக்குச் சகோதர சகோதரிகளே ஆதலால் ஆரியக் கட்டுகளை வெட்டியெறியுங்கள்; வஞ்சக சமயத்தைப் பலியிடுங்கள், யாவரையும் அன்போடு கூவி அழையுங்கள், பூர்வீக திராவிட மதத்திலிருந்து சிதறிப்போன கிறிஸ்து முகம்மதாதி மதஸ்தர்களையும், திராவிட சமயத்தைப் பின்பற்

றக்கூடிய நிலைமையிலிருக்கின்ற ஜனாசாரச் சீர்திருத்தக்காரர்கள், பௌத்தர்கள், பிரமோபாசிகள் முதலிய மற்ற சமயத்தினர்களையும் ஒருங்கே பற்றியிழுத்து (அன்பு, ஐக்கியம், சமாதானம் முதலியவைகள் மேலிட்டு யாறுட ஜாதியை ஒன்றாய்க் கூட்டாகின்ற) இம்மதத்திலிருக்கும்படி ஒற்றுமைப் படுத்தினாலன்றித் தென்னிந்தியாவிற்கு மத விஷயத்தில் தற்காலத்திய புதுப்பலமொன்றுமில்லை. இனியாவது திராவிடர்கள் ஓர் வகுப்பாரை மட்டும் சிறப்பிக்கும் ஆரிய மதத்தை விட்டு ஜாதி சமயபேதமின்றிச் சகலருமே சமத்துவமாய்ப் பாராட்டக்கூடிய திராவிட மதத்திற்குத் திரும்புவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

Q2
N14
171446
600 008

PETHACHI PRESS, PALAMCOTTAH.